மலர்-3 இதழ்-62 மார்ச் 16-31 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# கலியுகமும் பாகவத புராணமும்

# காலையில் துவாதசன தரிசனம் காணுங்கள்

தினசரி காலை எழுந்தவுடன் பார்க்க வேண்டியவை கோவில், கோபுரம், சிவலிங்கம், தெய்வப் படங்கள், நல்ல புஷ்பங்கள், மேகம் சூழ்ந்த மலைகள், தீபம், கண்ணாடி, சந்தனம், மிருதங்கம், கன்றுடன் பசு, உள்ளங்கை, மனைவி, குழந்தைகள்.

❖ ❖ ❖

சிவன், பார்வதி, விநாயகர், முருகர் உள்ள படம் ஒன்றை கிழக்குப் பார்த்து மாட்டி வைத்தால், அது வீட்டில் உள்ள வாஸ்து குறைபாடுகளை சிறிது சிறிதாக நீக்கும்.

❖ ❖ ❖

நமது வலது உள்ளங்கையில் மகாலட்சுமி இருப்பதால் காலை எழுந்தவுடன் வலது உள்ளங்கையை பார்க்க வேண்டும். இது துவாதசன தரிசனம் எனப்படும்.

❖ ❖ ❖

அமாவாசை, திவசம் ஆகிய நாட்களில் வாசலில் கோலம் போடக்கூடாது.

❖ ❖ ❖

அமாவாசை, பவுர்ணமி, மாதப்பிறப்பு, ஜன்ம நட்சத்திரம் ஆகிய தினங்களில் எண்ணெய் தேய்த்துக் குளிக்க கூடாது.

❖ ❖ ❖

நம் வீட்டின் கிழக்குப் பக்கம் துளசிச் செடி, வேப்ப மரம் இருக்க வேண்டும். அதனால் எந்தவித நோயும் வராது. விஷ ஜந்துக்களும் நம்மை அண்டாது. தூய்மையான காற்றும் கிடைக்கும்.





## தீராத வியாதியும் தோஷங்களையும் தீர்த்துவைக்கும்
# நடராஜரின் இடது பாத தரிசனம்

ஆடல்நாயகனை தரிசிக்கும்போது கண்டிப்பாக இடதுகாலை தரிசிக்க வேண்டும். சிதம்பரத்தில் நடராஜப் பெருமான், தனது இடது பாதத்தை வளைந்து தூக்கி திருநடனம் ஆடியதற்கு குஞ்சிதபாதம் என்று பெயர்.

இந்த தரிசனத்தை கண்டாலே தீராத வியாதியும் நீங்கும். பல மூலிகைகளால் செய்யப்பட்ட ஒரு பொருளை நடராஜரின் தூக்கிய திருவடியில் அணிவிக்கப்படும்போது, அந்த மூலிகை வேர்களுக்கு குஞ்சிதபாதம் என்றும் பெயர் இருக்கிறது...

சிவபெருமானின் இடது பாகத்தில் சக்திதேவி இருக்கிறார்.

அதனால்தான் எமதர்மராஜன், மார்கண்டயனை துரத்தி பாசக்கயிற்றை வீசியபோது மார்கண்டயன், சிவலிங்கத்தை கட்டிபிடித்து கொண்டான்.

அப்போது எமனின் பாசகயிறு சிவலிங்கத்தின் மேல்பட்டது.

இதனால் கோபம் அடைந்து எமனை இடது காலால் எட்டி உதைத்தார் ஈசன்.

தாயும்தந்தையுமான சிவசக்தியை மார்கண்டயன் சரண் அடைந்ததால் சிவபெருமான், சக்திதேவியின் அம்சமான தனது இடது பாகத்தில் உள்ள பாதத்தாலும் எமனை எட்டி உதைத்தார்.

அந்த இடது கால் சக்திதேவியின் அம்சம் என்கிறது புராணம். அதனால் ஆடல்நாயகனை தரிசிக்கும்போது கண்டிப்பாக இடதுகாலை தரிசிக்க வேண்டும்.

அப்படி தரிசித்தால் செய்வினை பாதிப்பு, சனிஸ்வரால் ஏற்படும் தொல்லை, ஜாதகத்தில் பொதுவாக இருக்கும் தோஷங்கள், வியாதிகள் நீங்கும். மோட்சம் கிடைக்கும். உடல் வலிமை பெறும், என்கிறது சாஸ்திரம்.



# வில்வ மரத்தால் ஏற்படும் நன்மை



வில்வ இலை ரொம்பவே உயர்வானது. வில்வத்தோட பெருமைகளைப் பற்றி சிவபுராணம் விரிவாக சொல்லி உள்ளது. வில்வமரத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள். ஒரு வில்வ மலரானது ஒரு லட்சம் தங்க புஷ்பங்களுக்கு இணையானது என்று சொல்லியிருக்கிறார்கள்.

அப்படி என்றால் அதன் சிறப்பு உங்களுக்குப் புரியுமே. அதைத் தவிர ஒரு வில்வ மரத்தை வீட்டில் வளர்த்தால் அஸ்வமேத யாகம் செய்த பலனும், ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பலனும், கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலனும் உலகில் உள்ள அத்தனை சிவாலயங்களைத் தரிசித்த பலனும் கிடைக்கும்.

அதைத் தவிர வில்வத்துக்கு மட்டுமே உள்ள தனிச் சிறப்பு அதற்கு நிர்மால்ய தோஷம் கிடையாது. அதைப் பறித்து எத்தனை நாள்கள் ஆனாலும் உலர்ந்து போனாலும் கூட பூஜைக்குப் பயன்படுத்தலாம். மற்ற மலர்களையோ இலைகளையோ அந்த மாதிரிப் பயன்படுத்தக் கூடாது. இது வில்வத்துக்கு மட்டுமே உள்ள தனிச் சிறப்பு

## துன்பங்களுக்கேற்ப கவசம் படியுங்கள்

1. பணக்கஷ்டம் கனகதாராஸ்தோத்திரம்
2. செய்வினை சுதர்சன கவசம்
3. கர்மவியாதி தீர சுதர்சன கவசம்
4. தொழில்/ வியாபார விருத்தி அஷ்ட லட்சுமி கவசம்
5. வழக்கு வெற்றிபெற ஹனுமந்த கவசம்
6. புத்திர பாக்கியம் – திருமணம் நடைபெற சந்தான கோபால கவசம்
7. உத்தியோகம் கிடைக்க நீல சரஸ்வதி கவசம்
8. ஏவல் பில்லி விலக நரசிம்ம கவசம்
9. மனைதோஷம் விலக ஸ்ரீசக்கரம் பிரதிஸ்டை
10. சகலதோஷம் விலக ஸ்ரீகாமாட்சி கவசம்
11. கிரகதோஷம் விலக ருத்ர கவசம்
12. ஐஸ்வர்யம் பெருக கனகதாரா கவசம்
13. கர்மவினை தீர ஸ்ரீதேவி கருமாரி துதி
14. நல்வழியில் செல்ல காயத்ரி மந்திரம்
15. சகலகாரிய வெற்றிக்கு ஸ்ரீராஜராஜேஸ்வரி கவசம்











## அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருப்பரங்குன்றம்

தல வரலாறு: தேவர்கள் தங்களை துன் புறுத்திய சூரபத்மனிடமிருந்து காக்கும்படி சிவனை வேண்டினர். அவர் தன் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு பொறிகளை உண்டாக் கினார். அதிலிருந்து ஆறு முகங்களுடன் முருகப்பெருமான் தோன்றினார். சூரனுடன் போரிட்டு அவனை மயிலாகவும், சேவலாகவும் மாற்றி ஆட்கொண்டார். இந்த நிகழ்வு திருச்செந்தூர்தலத்தில் நிகழ்ந்தது. சூரனை வெற்றி கொண்ட முருகனுக்கு, இந்திரன் தனது மகளான தெய்வானை திருமணம் செய்து தர சம்மதித்தார். அவர்களது திரு மணம் திருப்பரங்குன்றத்தில் நிகழ்ந்தது. திருமணத்திற்கு அனைத்து தெய்வங்கள், தேவர்கள், மகரிஷிகள் என அனைவரும் வந்தனர். நாரதர் முன்னிலையில் முருகன், தெய் வானை திருமணம் நடந்தது. இதேகோலத்தில் சுவாமி இங்கு எழுந்தருளினார். சுவாமிக்கு சுப்பிரமணியசுவாமி என்ற பெயர் சூட்டப் பட்டது.








## அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருச்செந்தூர்

தல வரலாறு: தேவர்கள் தங்களை தொந் தரவு செய்த, சூரபத்மனை அழிக்கும்படி சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர் களது வேண்டுதலை ஏற்ற சிவன், தன் நெற்றிக்கண்ணில் இருந்து ஆறு பொறி களை உண்டாக்கினார். அதிலிருந்து முருகப்பெரு மான் தோன்றினார். பின், சிவபெருமானின் கட்டளையை ஏற்று, சூரபத்மனை அழிக்க இங்கு வந்தார். இவ்வேளையில் முருகப் பெருமானின் தரிசனம் வேண்டி, தேவர்களின் குருவான வியாழ பகவான் இத்தலத்தில் தவமிருந்தார். அவருக்கு காட்சி தந்த முருகப்பெருமான், இவ்விடத்தில் தங்கினார். அவர் மூலமாக அசுரர்களின் வரலாறையும் தெரிந்து கொண்டார். அப்போது தனது படைத் தளபதியான வீரபாகுவை, சூரபத்மனிடம் தூது அனுப்பினார். அவன் கேட்கவில்லை. பின்பு, முருகன் தன் படைகளுடன் சென்று, அவனை வதம் செய்தார். வியாழ பகவான், முருகனிடம் தனக்கு காட்சி தந்த இவ்விடத் தில் எழுந்தருளும்படி வேண்டிக் கொண்டார். அதன்படியே முருகனும் இங்கே தங்கினார். பின்பு, வியாழ பகவான் விஸ்வகர்மாவை அழைத்து, இங்கு கோயில் எழுப்பினார். முருகன், சூரனை வெற்றி பெற்று ஆட்கொண்டதால் இவர், “செயந்திநாதர்’ என அழைக்கப்பெற்றார். பிற்காலத்தில் இப்பெயரே “செந்தில்நாதர்’ என மருவியது. தலமும் “திருஜெயந்திபுரம்‘ (ஜெயந்தி வெற்றி) என அழைக்கப்பெற்று, “திருச்செந்தூர்’ என மருவியது.

## அருள்மிகு தண்டாயுதபாணி (குழந்தை வேலாயுதர்) திருக்கோயில்

தல வரலாறு: நாரதர் கொடுத்த கனியை, தனக்கு தராததால் கோபித்துக்கொண்ட முருகன் மயில் மீதேறி இத்தலம் வந்தார். சமாதானம் செய்ய, அம்பிகை பின்தொடர்ந்து வந்தாள். சிவனும் அவளை பின்தொடர்ந்தார். முருகன் இத்தலத்தில் நின்றார். அம்பிகை, இங்கு மகனை சமாதானம் செய்தாள். ஆனாலும் முருகன் விடாப்பிடியாக இங் கேயே இருக்க விரும்புவதாகச் சொல்லி தங்கிவிட்டார். பிற்காலத்தில் இவ்விடத்தில் முருகனுக்கு கோயில் எழுப்பப்பட்டது. சுவாமி குழந்தை வடிவமாக நின்றதால், “குழந்தை வேலாயுதர்’ என்று பெயர் பெற்றார்.பழத்தின் காரணமாக முருகன் கோபித்து வந்தபோது, அவரைக் கண்ட அவ்வையார், “பழம் நீ’ (நீயே ஞானவடிவானவன்) என்று ஆறுதல் வார்த்தைகள் சொன்னார். இப்பெயரே பிற்காலத்தில், “பழநி’ என மருவியது.

## 4.அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில்

தல வரலாறு: படைப்புத் தொழிலில் ஆணவம் முற்றியிருந்த பிரம்மன் முருகப் பெருமானை சந்திக்க நேர்ந்தது.அப்போது பிரம்மனிடம் படைப்புத் தொழில் செய்யும் உனக்கு ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியுமா என்று முருகப்பெருமான் கேட்கிறார்.

இக்கேள்விக்கு பிரம்மனால் பதில் சொல்லமுடியவில்லை என்பதால் அவனுடைய நான்கு தலைகளிலும் முருகப்பெருமான் குட் டினார். கீழே விழுமாறு தம் திருவடி கொண்டு உதைத்து பிரம்மனை சிறையில் அடைத்தார். பின்பு படைப்பு தொழிலை முருகனே செய்தார். பிரம்மன் சிறையில் இருப்பதை நினைத்து வருந்திய திருமால் சிவபெருமானிடம் சொல்லி விடுதலை கிடைக்க வேண்டுகிறார்.

சிவ பெருமானும் முருகனிடம் பிரம்மனை விடுதலை செய்யும்படி கூற தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்று முருகன் விடுதலை செய்தார். இதை பார்த்து உளம் மகிழ்ந்த சிவபெருமான் முருகனை தன் மடியில் தூக்கி வைத்துக் கொண்டு பிரம்மனுக்கே தெரியாத பிரணவ மந்திரத்தை நீ எனக்கு சொல்ல வேண்டும் என்று கேட்க முருகனும் எல்லோரும் அறியக் கூறக் கூடாதே என்று சொல்லி சிவபெருமான் காதருகே சென்று பிரணவ மந்திரத்தின் பொருளை உரைத்தார்.

இந்நிகழ்ச்சி நடந்த தலமே இந்த சுவாமி மலைத் திருத்தலம் என்று தல வரலாறு கூறு கிறது.



### 5.அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் திருத்தணி

தல வரலாறு: திருத்தணிகை மலைப் பகுதியில் வசித்த குறவர்களின் தலைவனாக நம்பிராஜன் விளங்கினான். இவன் திருமாலின் புத்திரியை, சந்தர்ப்பவசத்தால் ஒரு வள்ளிக்கொடியின் கீழிருந்து கண்டெடுத்தான். அவளுக்கு வள்ளி என பெயர் சூட்டி வளர்த்து வந்தான். வள்ளி தினைப்புனத்தைக் காவல் காக்கும் பணியைச் செய்து வந்தாள். தினைப்புனம் என்பது உலகத்தையும், அதில் விளையும் தினைப்பயிர் முழுவதையும் தானே அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் “உலகப்பற்று’ எனப்படும் ஆசையையும் குறிக்கும். “இது உனக்குச் சொந்தமானதல்ல, எனக்குச் சொந்தம்‘ என்று பறந்து வரும் பறவைகள் பரமாத்மாவாகிய இறைவனைக் குறிக்கும். உலக ஜீவன்களோ இதைப் புரிந்து கொள்ளாமல், கவண்கல்லால் அவற்றை விரட்டியடிப்பது, தெய்வத்தைப் புரிந்து கொள்ளாத தன்மையைக் குறிக்கும்.இந்த உலகமே நிரந்தரமெனக் கருதியிருக்கும் இதுபோன்ற பாமர உயிர்களுக்கு தவம், யோகம், தியானம் இது பற்றியெல்லாம் தெரியாது. இப்படிப்பட்ட உயிர்களையும் ஆட்கொள்ளவே விரும்புவான். அப்படி வள்ளியை ஆட்கொள்ளவே முருகப்பெருமான் முதியவர் வேடத்தில் வந்தார். வள்ளியோ அவரை யாரென அறியாமல் பயந்தோடினாள். இறைவனோ, அவளை ஆட்கொள்ள யானை மூலம் பயமுறுத்தினார். அவர் அவளைத் தழுவினார். இறைவனின் ஸ்பரிசம் பட்டதுமே ஞானோதயம் பிறந்தது. அவருடன் ஐக்கியமாகி விட்டாள். பாமரர்கள், அவள் இறைவனுடன் ஐக்கியமானதை திருமணமாகக் கருதி, வள்ளி திருமணத்தை நடத்தி வைக்கிறார்கள். வள்ளியின் திருமணத்தலம் இது. முருகப்பெருமான், திருச்செந்தூரில் சூரனை சம்ஹாரம் செய்த பிறகு, கோபம் தணிந்து இத்தலத்தில் தங்கியதால் “தணிகை மலை’ என்று பெயர் பெற்று “திருத்தணி’ என்று மாறியது.

### 6.அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மதுரை

தல வரலாறு: தமிழ்பாட்டி அவ்வையார் முருகனிடம் மிகவும் அன்பு கொண்டவர். முருகன் அவ்வைக்கு அருள் புரிந்து, இந்த உலகிற்கு பல நீதிகளை உணர்த்த நினைத்தார்.ஒரு முறை அவ்வை கடும் வெயிலில் மிகவும் களைப்புடன் மதுரை நோக்கி சென்று கொண்டிருந்தார். இவரது நிலையறிந்த முருகன் மாட்டுக்கார சிறுவனாக வேடமணிந்து, அவ்வை செல்லும் வழியிலிருந்த நாவல் மரக்கிளையில் அமர்ந்து கொண்டார். களைப்புடன் வந்த பாட்டி இந்த மரத்தின் கீழ் அமர்ந்து சற்று இளைப்பாறினார். இதனை மரத்தின் மீது அமர்ந்திருந்த சிறுவன் பார்த்து, “”என்ன பாட்டி ! மிகவும் களைப்புடன் இருக்கிறீர்களே? தங்களது களைப்பை போக்க நாவல் பழங்கள் வேண்டுமா?’’ என்றான். சந்தோஷப்பட்ட பாட்டி “வேண்டும்’’என்றார்.

உடனே முருகன், "பாட்டி ! தங்களுக்கு சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?’’ என்றான். இதனைக்கேட்டு திகைப்படைந்த பாட்டி ஏதும் புரியாமல்,"சுட்ட பழத்தையே கொடேன்’’ என்றார். சிறுவன் கிளையை உலுக்கினான். நாவல் பழங்கள் உதிர்ந்தன. கீழே விழுந்ததால் மணல் அதில் ஒட்டிக்கொண்டது. அவ்வை அதை எடுத்து மணலை அகற்றுவதற்காக வாயால் ஊதினார்.

இதை வேடிக்கை பார்த்துகொண்டிருந்த சிறுவன்,""பாட்டி ! பழம் மிகவும் சுடுகின்றதோ?, ஆறியவுடன் சாப்பிடுங்கள்’’என்று கூறி சிரித்தான்.சிறுவனின் மதிநுட்பத்தை அறிந்த பாட்டி, மரத்தில் இருப்பவன் மானிடச் சிறுவனல்ல என்பதைப் புரிந்து கொண்டார்.

பின்னர் முருகன் தன் சுயவடிவில் அவருக்கு அருள்பாலித்து முக்தி தந்தார். முருகன் இந்த திருவிளையாடலால் உலகிற்கு ஒரு தத்துவத்தை உணர்த்தினார். அதாவது, “உயிர்களின் மீது “உலகப்பற்று’ என்னும் மணல் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அதைப் போக்க வெறும் கல்வியறிவு மட்டும் போதாது. இறைவனை அறியும் மெய்யறிவும் தேவை. பற்றை அகற்றினால் இறைவனை உணரலாம்‘ என்பதே அது

– ஆன்மிக ஜோதிட ஆசான்
மு.கிருஷ்ண மோகன் 8526223399





# நோய்களை மட்டுமல்ல பல தோஷங்களை போக்கும் கருங்காலி மாலை



கருங்காலி மரம் அதீத பிரபஞ்ச சக்தியை ஆகர்ஷணம் செய்து (மின் கதிர்வீச்சுகளைத்) தன்னுள் சேமிக்கும் தன்மை கொண்டது. ஜீவகாந்த சக்தியை அதிகரிக்க செய்கிறது. இதனால் இதன் நிழலில் அமர்ந்தால்கூட நோய் நீங்கும் வல்லமையை உணர்வீர்கள். தேகம் வலுவடைந்து, ஆன்மா பலமடைந்து ஆண்டவனைச் சரணடைய கருங்காலியைத் தொழுவோம் என்று முன்னோர்கள் கோவில்களில் தல விருட்சமாக மரங்களை வளர்த்து வணங்கினர்.

மரத்தின் நடுப்பாகமான கருமை நிறம் கொண்டப் பகுதியை (வைரம்) கொண்டு மாலை, தடி உருவபடுத்தப்படுகிறது. இது ஆன்மீக வாழ்வில் மிக பெரிய மாற்றத்தை நிகழ்த்துகிறது இதனின் மருத்துவப் பயன்கள் அளவற்றவை.

எதிர்விளைவுகளை ஏற்படுத்தாதவை. நீரிழிவு நோய், பெருவயிறு, வயிற்றுப்புழு நோய் ரத்தக் குறைவால் உருவாகும் திமிர் வாதம், பெருநோய் போன்றவை நீங்கும். உடல் பலமடையும். மேஷம் ராசி, விருச்சிகம் ராசி, அஸ்வினி நட்சத்திரம், பரணி நட்சத்திரம், விசாகம் நட்சத்திரம், அனுஷம் நட்சத்திரம், கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும், செவ்வாய்க்கிழமை அன்று பிறந்தவர்களுக்கும் மிகுந்த பலன் அளிக்கும். எல்லா கோயில்களிலும் கும்பாபி ஷேகத்தின் பொழுது கருங்காலி கட்டைகளை கலசத்தின் உள்ளே போடு வார்கள் அதனால் இடி மின்னலால் எந்த பாதிப்பும் அந்த கோயிலை சுற்றி வசிக்கும் நபர்களுக்கு வருவதில்லை. செவ்வாய்க் கிரகத்தின் நல்ல கதிர்வீச்சுகள் அதிகளவில் கிரகித்து வெளியேறுகின்றன. எனவே இதனை உடன் வைத்திருக் கும் பொழுது எதிரிகளின் தொல்லை, செய்வினை பிரச்சனை, நோய் மற்றும் மரண பயம் நீங்கும், காரிய சித்தி அடையும். தொழில் வளர்ச்சி அடையும். பண தட்டுப்பாடு நீங்கும். குலதெய்வ வழிபாடு தடை, பித்ரு தோஷம், செவ்வாய் கிரக தோஷத்தால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாப்பு அளிக்கிறது. மேலும் பல அதீத பயன் உடையது.

# கங்கா ஸ்தானத்தைவிட புனிதம் வாய்ந்தது

# ஹரிகதை

கங்கை நதிக்கரையில் இருந்து 4 மைல் தூரத்தில் உள்ள சிறிய கிராமத்தில் புண்ணியதாமா என்ற அந்தணர் வசித்து வந்தார். அதே ஊரில் பிருஹத்தபா என்ற பெரும் தவசியும் வாழ்ந்து வந்தார்.

அவர் தினமும் மாலை வேளைகளில் இறைவனின் லீலைகளை, ஹரி கதையாக கூறுவார். அந்த கதைகளை புண்ணியதாமா தவறாமல் கேட்டு விடுவார். தனது அன்றாட பணிகளை முடித்துக் கொண்டு, பிருஹத்தபா கூறும் கதையை கேட்க கிளம்பி விடுவார். தனது நூறாண்டு கால வாழ்க்கையில் ஒரு நாள் கூட அவர் ஹரி கதையை கேட்க தவறியதில்லை.

அன்றாட பணிகளை முடிப்பது, ஹரி கதையை கேட்பது, உணவு கேட்டு, தங்க இடம் கேட்டு வரும் அதிதிகளை உபசரிப்பது என்பவையே அவரது தலைசிறந்த பணியாக இருந்தது.



கங்கையில் இருந்து 4 மைல் தூரத்தில் இருந்தாலும் ஒரு நாள் கூட புண்ணியதாமா கங்கையில் நீராடியதில்லை. அவருக்கு அது பற்றிய சிந்தனையும் இருந்ததில்லை.

ஒரு முறை வெகு தொலைவில்இருந்த இரண்டு யாத்திரிகர்கள், கங்கா ஸ்நானம் செய்வதற்காக காசி நோக்கி சென்று கொண்டிருந்தனர். இரவு நேரம் ஆகி விட்டதால் வழியில் எங்காவது தங்கி மறுதினம் பயணத்தை தொடர இருவரும் நினைத்தனர்.

அருகில் இருந்த புண்ணிய தாமாவின் வீட்டிற்கு சென்று, 'வீட்டு திண்ணையில் தங்க இடம் கிடைக்குமா?' என்று கேட்டனர்.

அவர்கள் இருவரையும் யாத்திரிகர்கள் என்று தெரிந்து கொண்ட புண்ணியதாமா, வீட்டிற்குள் அழைத்துச் சென்று தனது மனைவியிடம் கூறி அன்னம் பரிமாறக் கூறினார்.

இரண்டு யாத்திரிகர்களும் உணவருந்துவதற்காக அமர்ந்தனர்.

அப்போது அவர்கள், புண்ணியதாமாவிடம், 'ஐயா! நாங்கள் காசிக்கு சென்று கங்கையில் நீராட உள்ளோம். இங்கிருந்து கங்கை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று கூறமுடியுமா?' என்று கேட்டனர்.



அதற்கு புண்ணியதாமா, 'நான் நூறு ஆண்டுகளாக இந்த கிராமத்தில் இருக்கிறேன். இங்கிருந்து 4 மைல் தூரத்தில்கங்கை நதி இருப்பதாக, பிறர் சொல்ல நான் கேள்விப் பட்டுள்ளேன். உண்மையை கூறவேண்டும் என்றால், இதுவரை நான் ஒருமுறை கூட கங்கையில் ஸ்நானம் செய்தது கிடையாது' என்றார்.

ஒரு கணம் திகைத்த அந்த அதிதிகள், மறுகணம் அன்னத்தை நிராகரித்து எழுந்து விட்டனர்.

'பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு கங்கா! என்று சொன்னாலும் கூட பாவங்கள் விலகிவிடும்.

இவர் என்னடா என்றால், அருகிலேயே இருந்து கொண்டு கங்கையில் நீராடவில்லை என்கிறார். இவரை விட பாவி யாரும் இருக்க முடியாது. இவ்வளவு சமீபத்தில் இருந்து கொண்டு கங்கா ஸ்நானம் செய்யாதவரின் வீட்டில் நாம் அதிதிகளாக தங்கியதே மகா பாவம்' என்று நினைத்து வீட்டை விட்டு உடனடியாக வெளியேறினர்.

அவர்களின் செய்கையைக் கண்டு புண்ணிய தாமாவின் மனம் மிகவும் துயரத்தில் ஆழ்ந்துவிட்டது.

ஆனால் அந்த இரு யாத்திரிகர்களும், 'கங்கையில் நீராடாதவரின் வீட்டில் தங்கியிருந்த பாவத்தை கங்கையில் நீராடிதான் போக்க வேண்டும்' என்று தங்களுக்குள் பேசிய படியே கங்கை நதியை நோக்கி வேகமாக நடைபோட்டுச் சென்றனர்.

கங்கை நதிக்கரையை அவர்கள் அடைந்த போது கண்ட காட்சி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கங்கை நதி வறண்டுபோய் கிடந்தது.

அதில் ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லை. கானல் நீர் கூட தென்படவில்லை. கங்கை நதிக்கரை ஓரமாகவே நடந்து கங்கை உற்பத்தியாகும் இடம் வரை சென்று விட்டனர் அவர்கள்.

ஆனாலும் அவர்களால் கங்கையை காணமுடியவில்லை.

'எவ்வளவு தூரத்தில் இருந்து வந்திருக்கிறோம். நம்மால் கங்கையில் நீராட முடியாத நிலை ஏற்பட்டுவிட்டதே! நாம் ஏதோ அபவாதம் செய்து விட்டதாக தெரிகிறதே!' என்று புலம்பத் தொடங்கி விட்டனர்.

கங்கா தேவியை மனதார நினைத்து, 'தாங்கள் செய்த குற்றத்தை பொறுத்து தங்களுக்கு காட்சி தர வேண்டும்' என்று மனமுருக வேண்டினர்.


ஆன்மிகமலர் மெயில் புக்

அப்போது அவர்கள் முன் தோன்றிய கங்கா தேவி,

‘‘என்னை காணும் தகுதியை நீங்கள் இழந்து விட்டீர்கள். மிகவும் பாக்கியசாலியும், புண்ணியவானுமான, புண்ணியதாமாவை இருவரும் சேர்ந்து நிந்தித்து விட்டீர்கள்.

ஹரி கதை எங்கெல்லாம் நடக்கிறதோ அங்கெல்லாம் அனைத்து தீர்த்தங்களும் இருக்கின்றன.

அதே போல் ஹரி கதையை தொடர்ந்து கேட்பவர்கள் புனிதத்திலும் புனிதம் அடைந்தவர் ஆகிறார்கள்.

அத்தகைய சிறப்பு மிக்க புண்ணியவானின் பாதங்கள் என் மீது படாதா என்று பல காலங்களாக நான் காத்திருக்கிறேன்.

நீங்களானால் அவரது மனம் புண்படும்படி நடந்து கொண்டு வந்திருக்கிறீர்கள். புண்ணியதாமாவிடம் சென்று மன்னிப்பு கோருங்கள். அதுவரை உங்களால் கங்கையில் நீராட முடியாது’’ என்று கூறி மறைந்து விட்டாள்.

தங்கள் தவறை உணர்ந்து கொண்ட இருவரும் உடனடியாக, புண்ணியதாமாவிடம் சென்று அவரது காலில் விழுந்து தங்கள் தவறை பொறுத்துக் கொள்ளும் படி கேட்டனர்.

அவர்களை அரவணைத்துக் கொண்ட புண்ணியதாமா, இருவரையும் பிருஹத்தபாவிடம் அழைத்துச் சென்று இரண்டு ஆண்டுகள் ஹரி கதை கேட்கும்படியாக செய்தார்.

பின்னர் அனைவரும் சென்று கங்கையில் நீராடி மகிழ்ந்தனர். கங்கையில் நீராடுவது என்பது நிச்சயமாக அனைவராலும் முடியாதது.

ஆனால் ஹரி கதை கேட்பது, படிப்பது என்பது அனைவராலும் நிச்சயம் செய்து முடிக்கக் கூடிய விஷயம்தான். ஹரி கதையை படிப்பதன் வாயிலாகவும் நமது பாவங்கள் அனைத்தும் விலகும்.

அதே நேரம் இறைவனின் பக்தனை நிந்திப்பது என்பது பாவத்திலும் பாவமாகும்.

ஆயிரம் பிரம்மஹத்தி தோஷத்திற்கும் கூட பிராயச்சித்தம் என்பது உண்டு. ஆனால் பகவானின் பக்தனை நிந்திப்பவனுக்கு எந்த பிராயச்சித்தமும் இல்லை என்பதை உணருங்கள்.



# உன்னை நீ நேசி



உன்னை நேசி என்கிறார் புத்தர். இது ஒரு புரட்சிகரமான மாற்றத்துக்கு அடிப்படையாகப் போகிறது. உன்னை நேசிப்பதில் எந்த பயமும் வேண்டாம். முழுக்க நேசி. உனக்கே ஆச்சர்யமாக இருக்கும். சுய நிந்தனை, சுய அவமதிப்பு ஆகியவற்றை கழித்துக்கட்டும் அந்த நாள். உன்னை நீயே மதிப்புள்ளவனாக கருதும் அந்த நாள், உன்னை கடவுள் நேசிக்கிறார் என்பதை புரிந்து கொள்ளும் அந்த நாள் ஒரு மாபெரும் வரப் பிரசாதமாக இருக்கப் போகிறது. அந்த நாள் முதல் மற்றவரை அவரவர் எப்படி இருக்கிறார்களோ அப்படியே பார்க்க முடியும் உன் மனதில் அன்பும் கனிவும் பெருக்கெடுக்கும். அது பிறருக்காக வேடம் போடும் கனிவல்ல. வெகு இயல்பாக, ஊற்று நீராக பிரவகிக்கும் கனிவு.

உன் மனம் சதா எதையாவது முன்னிறுத்திக் கொண்டே இருக்கிறது. தன்னை முன்னிறுத்திக் கொண்டிருக்கிறது. உன் மனம் எதார்த்தத்தில் குறுக்கிட்டுக் கொண்டே இருக்கிறது. அதற்கு ஒரு நிறத்தை கற்பித்து வைக்கிறது. அதனுடையதல்லாத ஒரு தோற்றத்தையும் வடிவத்தையும் கற்பித்து காண வைக்கிறது. எதையும் அதுவாகப் பார்க்க உன் மனம் உன்னை விடுவதே இல்லை. உன் மனம் எதை விரும்புகிறதோ அதையே உன்னை பார்க்க வைக்கிறது.

அகந்தை என்னும் இருட்டு அண்டவே முடியாத அளவுக்கு பிரகாசமானது அன்பு. மற்றவர்கள் மீது மட்டுமே அன்போடு இருக்கும்வரை, உன் அன்பு மற்றவரை நோக்கியே இருக்கும் வரை நீ இருட்டில்தான் உழன்று கொண்டிருப்பாய்.

உன் ஒளியை முதலில் உன்னை நோக்கி திருப்பு. உனக்கு நீயே ஒரு விளக்காகிவிடு. அந்த ஒளி உன் அக இருட்டை களையட்டும். உன் அகத்தகத்துப் பல வீனங்களை விரட்டி விடட்டும். அன்பு உன்னை ஒரு மாபெரும் சக்தியாக மாற்றட்டும். ஓர் ஆன்மசக்தியாக....
ஆன்மா சக்தியுடையதாகி போகும் போது நீ இறக்கப் போவதில்லை என்பதை புரிந்து கொள்வாய்.

நீ உன்னை சிரஞ்சீவி என்பதை தெரிந்து கொள்வாய். நீ நித்தியமானவன் என்பதை அறிந்து கொள்வாய்...!

– ஓஷோ


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033




ஆன்மிகமலர் மெயில் புக்
16-31 மார்ச் 2019 11
www.aanmeegamalar.com

# ஆண்கள் மட்டும் வழிபடும் கோவில்

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் இருந்து 25 கி.மீ தூரத்தில் உள்ளது மாம்பாறை கிராமம். இங்குள்ள முனியப்பசாமி கோவிலில் பெண்கள் வழிபடவும், பூஜைகளில் பங்கேற்கவும் அனுமதியில்லை. மேலும் கோவிலில் பலியிடப்படும் விலங்குகள் கூட ஆட்டுக்கிடா மற்றும் சேவல் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது.

இக்கோவிலில் அனைத்து வழிபாடுகளிலும் ஆண்கள் மட்டுமே பங்கேற்க முடியும். பெண் குழந் தைகளுக்கு கூட அனுமதியில்லை. அவ்வளவு சக்தி வாய்ந்த இக்கோவிலின் தல வரலாறு மகா பாரதத்துடன் தொடர்புடையது என்கிறார் கோவில் பூசாரி சேகர்.

பஞ்சபாண்டவர்கள் வனவாசத்தின்போது இப் பகுதிக்கு வந்தனர். அப்போது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பழம் தரும் மரத்தின் அடியில் சைந்தவா முனிவர் தவமிருந்தார்.

அந்த மரத்தின் பழத்தை உண்ண பாஞ்சாலி விரும்பியதால், அர்ஜுனன் அம்பு எய்தவுடன் பழம் தரையில் விழுந்ததாம். அப்போது அங்கு தோன்றி கிருஷ்ணர் அந்த அற்புத மான மாம்பழத்தை முனிவர் உண்ண விரும்பினார் என்றும், பழம் மரத்தில் இல்லை என்றால் முனி வரின் சாபத்துக்கு ஆளாக நேரிடும். எனவே மாம்பழத்தை பழையபடி மரத்திலேயே ஒட்ட வைத்து விடும்படி கூறினார். அதன்பேரில் பாண்டவர்கள் அந்த அற்புத பழத்தை மரத்தில் ஒட்ட வைத்து விட்டு அங்கிருந்து கிளம்பி விட்டார்களாம்.

கிருஷ்ணர் மட்டும் இடையர் உருவத்தில் அங்கு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். தவம் கலைத்த முனிவர் அந்த மரத்தில் இருந்த மாம்பழத்தில் காயம் இருப்பதை கண்டார். அந்தப் பழம் காயம்பட்டதற்கு மாடு மேய்ப்பவர்தான் கார ணம் என்று எண்ணி அவரை துரத்த முயன்றார். அப்போது கிருஷ்ணரின் தலை முடியை பிடித்த முனிவர், ஞானப்பார்வையால் நடந்தவற்றை அறிந்து கொண்டார்.

ஒரு பெண்ணால்தான் தனக்கு கிடைக்க வேண் டிய கனி மரத்திலிருந்து பறிக்கப்பட்டது. அதனால் பெண்களுக்கு என்னுடைய தரிசனம் கிடையாது என்றும் நான் தவமிருந்த காலத்தில் எனக்கு உதவிய முனியப்பசாமிக்கு எனக்கு எதிரே கூடாரம் அமைத்து என்னையும், அவரையும் தரிசனம் செய்யலாம். முனியப்பசாமிக்கு மட்டும் கிடா மற்றும் சேவல் வெட்டி படைக்கலாம் என்று கூறிய முனிவர் அப்படியே சிலையாகி விட்டார். இதுதான் இக்கோவிலின் தல வரலாறு என்றார் பூசாரி சேகர்.

இந்த கோவிலின் சிறப்பு, வசூலாகாத கடன்கள் குறித்து சீட்டில் எழுதி கோவி லில் உள்ள வேல்கம்பில் தொங்கவிட்டால் உடனே அக்கடன் தொகை வசூ லாகி விடும் என்பது பக்தர் களின் நம்பிக்கையாக உள்ளது.

கடன் தொகை வசூலான பிறகு நேர்த்திக் கடனாககிடா வெட்டி பிரார்த்தனையும் செய் கின்றனர்.

இங்கு சாதாரண நாட்களில் சுமார் 50 கிடாக்களும், தை, மாசி, ஆடி மாதங்களில்நூற்றுக் கணக்கான கிடாக்களும் நேர்த்திக்கடனாக வெட்டப்படு கின்றன.

நேர்த்திக்கடனாக கோழி கள், ஆடுகளில் பெண் இனங் களை தவிர்த்து விடுகின்றனர். இங்கு சமைப்பது முதல் சாப் பிடுவது வரை ஆண்கள் மட் டுமே. சாப்பாடு, கறி மீதி இருந்தால் வீட்டுக்கு கூட எடுத்துச் செல்வதில்லை.

அங்கேயே குழி தோண்டி புதைத்து விடுகின்றனர். இந்த முனியப்பசாமியை தரிசனம் செய்ய தமிழகம் மட்டுமின்றி கேரளம், கர்நாடகம், ஆந்திர பிரதேசம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராள மானோர் வருகின்றனர்.










# பெண்களின் மனதை கட்டுப்படுத்தும் தாலி உருவான கதை

பெண்ணுக்கு மார்பு குழியில் ஒரு நரம்பு முடிச்சு இருக்கிறது இது ஆணுக்கு இல்லை... இந்த நரம்பு முடிச்சு மூளையில் பேசல் ரீஜன் பகுதியோடு தொடர்பு ஏற்படுத்தும் வேலை செய்யும்... இது பெண்ணுக்கு இரண்டு நரம்புகள் கொண்ட பாதையாகவும், ஆணுக்கு ஒரு நரம்பு கொண்ட பாதையாகவும் இருக்கிறது... இதனால் ஆணை விட பெண்ணுக்கு அதிக நியாபக சக்தியை உண்டாக்குகிறது.....!

இந்த அதிக நியாபக சக்தியால் ஆணை விட பெண்ணுக்கு சில குழப்பங்களையும் கொடுக்கிறது... ஒரு பெண் ஒரு விசயத்தில் ஒரு முடிவு எடுத்துட்டு பின் அதனால் குழப்பம் அடைவதற்குக்கு இதுதான் காரணம்.....!

இதை கண்டறிந்த ஒரு ஞானி ராஜராஜ சோழன் இடம் சொல்ல அதற்கு மருந்து கண்டு பிடிக்க முடிவு செய்து அதன் படி ஒவ்வொரு உலோகத்துக்கும் ஒரு மருத்துவ குணம் உண்டு அதன்படி தங்கத்திற்கு இருக்கும் மருத்துவ குணத்தை கண்டறிந்து, அந்த தங்கம் பெண்ணுடைய மார்பு குழியில் எப்போதும் உரச உரச பெண்ணிற்கு நன்மை தரும் என்று இந்த “மாங்கல்யம்” முறைய கொண்டு வந்தார்கள். அது சரியாக மார்புகுழி இடத்தில் வரவேண்டும் என்பதால், தாலிக்கயிறுக்கு மூன்று முடிச்சு போடும் வழக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வாறு மூன்று முடிச்சி போட்டால் தாலியில் உள்ள தங்கம் ண்களின் மார்பு குழியில் வரும் என்று ஒரு கணக்கு போட்டார்கள். இந்த “மாங்கல்ய” முறையைத்தான் இப்போது வரை நாம் பயன்படுத்துவது.





புதிய பொலிவுடன்
Aanmeegamalar (mobile app)
ஆன்மிகமலர் .காம்

வழிபாட்டுத் தலங்களைப் பற்றி குறிப்புகள்
YouTube
அற்புத வண்ணமயமான ஆன்றோர் தத்துவங்கள்
பலன், பரிகாரம், ஜோதிடப் பலன்கள்
போன்ற புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளது
GET IT ON Google Play
பயன்படுத்தி
புதிய mobile app டவுன்லோடு செய்து மேற்கண்ட பகுதிகளை படித்து பயன் பெறுங்கள்
ஆன்மிகமலர் .காம்

## உண்மை அன்பால் வென்ற நண்பன்

# தந்தைக்கு நிகராக அனந்தனுக்கு மரியாதை செய்த ஸ்ரீஇராமன்



ஒருமுறை வசிஷ்டரின் ஆசிரமத்தில் ஸ்ரீராமன் தனது சகோதரர்கள் லட்சுமணன், பரதன் மற்றும் சத்ருக்னனுடன் வித்யாப்பியாஸம் செய்து கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு உற்ற நண்பன் ஒருவனும் இருந்தான். அவன் பெயர் அனந்தன். பரம ஏழையான அவன், வசிஷ்டரின் ஆசிரமத்தில் குருவுக்கு சேவை செய்து கொண்டிருந்தான்.

குருகுலத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த ஸ்ரீராம லட்சுமண சகோதரர்களுக்குத் தொண்டு செய்வதில், அனந்தன் பேரானந்தம் கொண்டான். குறிப்பாக, ஸ்ரீராமன்மீது அவன் வைத்த பற்றும் பாசமும் அளவுகடந்ததாக இருந்தது. பதிலுக்கு அனந்தனிடம் ஸ்ரீராமனும் பேரன்பு காட்டினான். இருவரும் சேர்ந்து ஆனந்தராமனாக குருகுலத்தில் விளங்கினர்.

ஸ்ரீராமனுக்கு ஏடுகளை எடுத்து வைத்தல், எழுத்தாணியைக் கூராக்குதல், வில்லைத் துடைத்தல், அஸ்திரங்களை எடுத்து வைத்தல், உணவு பரிமாறுதல் ஆகிய பணிகளை பெருமகிழ்ச்சியோடு செய்து வந்தான் அனந்தன்.

ஸ்ரீராமனை ஒருநாள் காணவில்லை என்றாலும், அவன் மனம் ஏங்கித் தவிக்கும். 'சுதாமனும் கண்ணனும் போல' வசிஷ்டருடைய குருகுலத்தில் அனந்தனும் ஸ்ரீராமனும் நட்பு கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு மாதமும் சில நாட்கள் வனத்துக்குச் சென்று, தர்ப்பைப் புல் பறித்து வரவேண்டியது அனந்தனின் கடமை. அதுபோல் ஒருமுறை அனந்தன் வனத்துக்குச் சென்றிருந்தான். அந்த நேரத்தில் ஸ்ரீராமனின் குருகுலம் முடிந்து, குருவிடம் விடைபெற்று சகோதரர்களுடன் அயோத்திக்குச் சென்றுவிட்டான். வனத்தில் இருந்து திரும்பி வந்த அனந்தன் விவரம் அறிந்து தாங்கமுடியாத வருத்தம் கொண்டான்.

உடனே ஸ்ரீராமனைக் காண அவன் மனம் துடித்தது. உடனே புறப்பட்டு, அயோத்தியில் உள்ள ஸ்ரீராமனின் அரண்மனைக்குச் சென்றான். அங்கே அவனுக்கு மேலும் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அப்போதுதான் மகரிஷி விஸ்வாமித்திரருடன் ஸ்ரீராமனும் லட்சுமணனும் யாக சம்ரக்ஷணத்துக்காக வனத்துக்குப் புறப் பட்டுச் சென்றிருந்தனர்.

துக்கம் அனந்தனின் தொண்டையை அடைத்தது. ஒன்றும் அறியாத பாலகனான ஸ்ரீராமன் கானகம் செல்ல நேர்ந்ததை எண்ணிக் கலங்கினான். ஸ்ரீராமனைக் காட்டுக்கு அனுப்பிய தசரதனையும், அழைத்துச் சென்ற விஸ்வாமித்திரரையும் மனத்துக்குள் கடிந்து கொண்டான்.

பாவம் ஸ்ரீராமன்! காட்டில் அவன் என்ன செய்வான்? அவனுக்கு யார் சேவை செய்வார்கள்? நித்திய கர்மங்களுக்கு தர்ப்பை, சமித்து போன்றவற்றை யார் சேகரித்துத் தருவார்கள்?



இப்படியெல்லாம் அவன் மனம் தவித்தது. எப்படியும் ஸ்ரீராமனைத் தேடிக் கண்டுபிடித்து, அவனுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று முடிவு செய்துவிட்டான் அனந்தன்.

தன் குரு வசிஷ்டரிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல், நேராகக் காட்டை நோக்கிச் சென்றான். அடர்ந்த காட்டில், 'ராமா ராமா' என்று கதறிக்கொண்டு, ஸ்ரீராமனைத் தேடி அலைந்தான். காட்டில் வழி தவறி, ஒரு இருண்ட பகுதிக்குள் அகப்பட்டுக்கொண்டான். அங்கே பல நாட்கள் ஸ்ரீராமனைத் தேடியும், அவனைக் காணாமல் அனந்தனின் மனம் வாடியது.

ஸ்ரீராமனைக் காணாமல் ஊர் திரும்பவும் அவனுக்கு விருப்பமில்லை. 'ராமா ராமா' என்று ஜபித்துக்கொண்டு, அன்ன ஆகாரமின்றி, அந்தக் காட்டிலேயே ஓரிடத்தில் நிஷ்டையில் அமர்ந்தான். அவன் அமர்ந்த இடத்தில், அவனை மூடியவாறு புற்று வளர்ந்துவிட்டது. ஆனால், அவனது 'ராம' ஜபம் மட்டும் நிற்கவில்லை.

காலச் சக்கரம் வேகமாகச் சுழன்றது. இதற்கிடையில், ராமாயண சம்பவங்கள் அனைத்துமே நிகழ்ந்து முடிந்திருந்தன. விஸ்வாமித்திரரின் யாகத்தை முடித்துக் கொடுத்து, சீதையை மணம் முடித்து, தந்தை சொல் காக்கக் கானகம் சென்று, சீதையைப் பிரிந்து, அனுமனின் உதவியால் அவள் இருக்கும் இடம் அறிந்து, இலங்கை சென்று ராவண சம்ஹாரம் செய்து சீதையை மீட்டு, அயோத்தி திரும்பியிருந்தான் ஸ்ரீராமன். அவன் பட்டாபிஷேகத்துக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இத்தனை நடந்ததும், அது எதுவும் தெரியாமல் புற்றுக்குள் 'ராமா ராமா..' என்று தவமியற்றிக்கொண்டிருந்தான் அனந்தன்.

ஸ்ரீராமனின் பட்டாபிஷேகத்தைக் காண பாரத தேசத்தின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் மக்களும், மன்னர்களும், மகரிஷிகளும் அயோத்திக்கு வந்துகொண்டிருந்தனர். அப்போது காட்டு வழியே சென்று கொண்டிருந்த சில மகரிஷிகள் 'ராம' நாமத்தைப் பாடிக்கொண்டே சென்றனர். அவர்களில் ஒருவரது கால் பட்டு அனந்தன் தவமியற்றிக்கொண்டிருந்த புற்று இடிந்தது. அனந்தன் தவம் கலைந்து எழுந்தான். 'ராமா ராமா எங்கிருக்கிறாய் என் ராமா?' என்று கதறினான்.

காலச் சுழற்சியினால் தனக்கு வயதாகியிருப்பதைக்கூட அவன் அறியவில்லை. பல ஆண்டுகள் முடிந்துபோனதையும் அவன் உணரவில்லை.

இன்னும் குழந்தைபோல ஸ்ரீராமனைத் தேடினான். அப்போது மகரிஷிகள் கூட்டத்தில் ஒருவர், அவன் யாரென்று விசாரித்துத் தெரிந்துகொண்டு, அவனுக்கு ஆறுதல் கூறினார். ஸ்ரீராமன் வனவாசம் முடிந்து பட்டாபிஷேகம் செய்து கொள்ளப் போவதையும், அதற்காகவே எல்லோரும் அயோத்தி செல்வதையும் அனந்தனுக்குத் தெரிவித்தார். ராமனுக்கு ஏற்பட்ட துன்பங்களைக் கேட்டு கண்ணீர் வடித்தான் அனந்தன். இருந்தாலும், ராமனுக்குப் பட்டாபி ஷேகம் நடக்கப்போகும் செய்தி அறிந்து, அதைக் காண மகரிஷிகளுடன் அயோத்தி புறப்பட்டான்.



அயோத்தி நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது.அன்று பட்டாபிஷேகநாள்.எங்கும்வேத கோஷ மும், மங்கல இசையும் முழங்கிக் கொண்டிருந்தன. குலகுருவசிஷ்டர், விஸ்வாமித்திரர் முதலானோர் பட்டாபிஷேக ஏற்பாடுகளை முன்னின்று செய்து கொண்டிருந்தனர். மக்கள், மன்னர்களுடன், தேவர்களும் தேவமாதர்களும் அங்கே வந்திருந்தனர்.

ஸ்ரீராமன் அதிகாலையிலேயே மங்கல நீராடி, ஆடை அணிகலன்கள் அணிந்து, தன் குலதெய்வமான சூரிய தேவனையும், தாயார் மூவரையும் வணங்கி, கொலு மண்டபம் நோக்கி கம்பீரமாக நடந்து வந்தான். அப்போது எல்லோரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடையும் வகையில் உரத்த குரலில், "அடே ராமா! இத்தனை காலம் எங்கிருந்தாயடா? உன்னை எத்தனை காலமாய் தேடுகிறேனடா?" என்று குரல் கொடுத்தபடியே ராமனை நோக்கி ஓடி வந்தான் அனந்தன்.

ராமனை இறுகத் தழுவிக் கொண்டான்.

கந்தல் உடையில், ஜடா முடியுடன் பரதேசிக் கோலத்தில் பாமரன் ஒருவன், 'அடே ராமா' என்று கூவி அழைத்தது கண்டு, அவையினர் அதிர்ச்சியுற்றனர். 'எவனோ பைத்தியக்காரன் இவ்வாறு செய்கிறான்' என்று கோபத்துடன் காவலர்கள் அவனைப் பிடித்திழுக்க விரைந்தபோது, ஸ்ரீராமன் அனந்தனை நெஞ்சாறத் தழுவி, அவன் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்து, "என்னை மன்னித்துவிடு அனந்தா!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினான்.

"உன்னிடம் சொல்லிக்கொள்ளாமலே குருகுலத்தில் இருந்து வந்துவிட்டேன். என் பிரிவினால் நீ எவ்வளவு துயரம் அடைந்திருப்பாய் என்பதை நான் அறிவேன். என் தவற்றை மன்னித்துவிடு" என்று மீண்டும் சமாதானம் செய்தான். அதைக் கேட்டு எல்லோரும் திடுக் கிட்டனர். தன்னைப் போலவே தன் பிரபுவிடம் பக்தி செலுத்தும் மற்றொரு பக்தன் இருக்கிறான் என்றெண்ணிப் பூரித்த அனுமனின் கண்களிலும் நீர் சுரந்தது.

அப்போது வசிஷ்டர், "ராமா இவர் யார்?" என்று கேட்க, "தெரியவில்லையா குருதேவா? இவன் என் பள்ளித் தோழன். தங்கள் குரு குலத்தில் சேவை செய்த சீடன் அனந்தன். இத்தனை பெரிய அவையில் எல்லோரும் என்னைப் 'பிரபு' என்றும் 'மகாராஜா' என்றும்தான் அழைக்கிறார்கள். என்னை 'அடே ராமா' என்று அழைக்க என் தந்தை தசரதன் இல்லையே என ஏங்கினேன். அந்தக் குறையைத் தீர்த்து வைத்ததன் மூலம் என் தந்தைக்கு நிகரானவன் ஆகிவிட்டான் இந்த அனந்தன்!" என்று கூறினான் ஸ்ரீராமன். வசிஷ்டரும் அனந்தனைக் கட்டித் தழுவி ஆசீர்வதித்தார். எல்லோர் கண் களிலும் ஆனந்தக் கண்ணீர்!

"இத்தனை நாட்கள் எனக்காகத் தவமிருந்து, இடையறாமல் என் நாமத்தை ஜபித்து, என்னைத் தேடிக் கண்டடைந்த இவனுக்கு நான் இந்த அவையில் மரியாதை செய்யக் கடமைப்பட்டுள்ளேன்" என்று கூறிய ஸ்ரீராமன் அனுமனை நோக்கி, 'உன்னைப் போலவே என்னை நேசிக்கும் இவனுக்கு என்ன கௌரவம் தரலாம்?" என்று கேட்டான்.

" ரபு! தங்கள் தந்தைக்குச் சமமானவர் இவர் என்று கூறினீர்கள். தாங்கள் சிம்மாசனத்தில் அமரும் முன்பு, இவரை அதில் அமர்த்தி மரியாதை செய்வது இவருக்கு மட்டுமல்ல, நம் அனைவருக்குமே பெருமை!" என்று கூறினான் அனுமன். எல்லோரும் அதை ஆமோதித்தனர்.

இத்தனை பெரிய மரியாதைக்குத் தான் தகுதியானவனா என்றெண்ணிக் கூனிக் குறுகினான் அனந்தன். அவன் வேண்டாம் வேண்டாம் என்று தடுத்தும் கேளாமல் அவனைச் சிம்மாசனத்தில் அமர்த்தி, மாலை அணிவித்து மரியாதை செய்து, பாத பூஜையும் செய்தான் ஸ்ரீராமன். அதன் பின்பே, ஸ்ரீராமன் பட்டாபிஷேகம் ஆரம்பமானது.

GET IT ON Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
ஆன்மிகமலர் .காம்

# மோக வலை காம போகங்களில் பற்றுடையவர்கள் பாழ் நரகத்தில் வீழ்கின்றனர்

பரமஹம்ஸர் அருளுகிறார்: "ஒரு வலிமையான கெட்ட பழக்கம் தேக தேசத்தில் நீண்ட காலமாக அதிகாரத்தில் இருப்பது குழப்பத்தையும் துன்பத்தையும் வரவழைக்கும். ஆன்மீகப்பஞ்சம், மனரீதியான காய்ச்சல்கள், மேலும் பொதுவான உடல் மற்றும் மன ஏழ்மை ஆகியவை அந்தக் கொடுங்கோல் ஆட்சி நடக்கும் தேகத்தில் நிலவுகின்றன. ஒரு வலிமையான கெட்ட பழக்கம், தினசரி சுயசோதனை எனும் நீதிமன்றத்தின் முன்னர், மனச்சாட்சி எனும் தலைமை நீதிபதியின் கீழ் குற்றஞ்சாட்டப்படவேண்டும்.

அந்நீதிபதி விவேகமெனும் நீதி மன்றத்தில் தெரிவிக்கவேண்டியது. என்னவெனில், குற்றம் மிகுந்த செயல்களில் விடாப்பிடியாக இருப்பதினால் ஏற்படும் தவிர்க்க முடியாத விளைவுகள் பழுதடைந்த நரம்பு மண்டலம், வீணாக்கப்பட்ட சக்திகள், மறைந்துபோன மகிழ்ச்சி ஆகியனவாக இருக்கும் என்பதாகும். இந்த இடைவிடாது ஒலிக்கப்படும் எச்சரிக்கைக் குறிப்பானது, குற்றமுள்ள வஞ்சிக்கும் பழக்கத்தை என்றென்றைக்குமாக ஒழித்துவிடவேண்டும் என்ற தீர்மானத்திற்கு, விவேகம் எனும் நீதிபதிகளின் குழுவினை படிப்படியாக தூண்டிட உதவிபுரியும்".

"நீதிமன்றத்தை நம்பவைப்பது சில சமயங்களில் கடினமாக இருக்கும். புகைத்தல், மது அருந்துதல் அல்லது, பாலுறவு அனுபவங்களில் ஈடுபடுதல் ஆகியவற்றில் மிதமிஞ்சியுள்ள அநேக மனிதர்கள் இந்த அடிமைத்தனமான நிர்பந்தங்களிலிருந்து விடுதலை பெற நாடவோ அல்லது விரும்புவதோ கூட இல்லை. உண்மையை உணர்த்தும் வேதனையுள்ள விளைவுகளை அவர்கள் உடனே பெறாததால், தாம் செய்வதில் எந்தவிதத் தீங்கும் இல்லையென பொய்யாகச் சிந்திக்கின்றனர். குழந்தைகளைப் போன்று தமது செயல்களின் இறுதி விளைவுகளைக் கற்பனை செய்து பார்க்கத் தவறுகின்றனர். நல்லது, தீயது என்ற பாகுபாடில்லாது மனித செயல்களின் தன்மைக்கு ஏற்ப இயங்கும் விதிகளை அவர்கள் இயக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பதை அவர்கள் காண்பதில்லை. அதாவது, தீங்குமிகு பழக்கங்களின் மண்வெட்டிகள் மெதுவாகத் தோண்டினாலும்கூட, அவை நிச்சயமாக ஓர் அகல வாய்பிளந்த அகால சவக்குழியை, தவறான பழக்கங்களுக்கு அடிமையானவன் சுட்டெரிக்கும் துன்ப ஜூவாலைகள் ஊடாகச் செல்கிறானோ அந்தத் துன்பக்குழியைத் தோண்டுகின்றன. இப்படிப்பட்ட மனிதர்களைப் பற்றி பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் பகவத் கீதையில் கூறியுள்ளார்: "பல எண்ணங்களில் குழப்பமடைந்தவர்கள், மோக வலையில் மூடப்பெற்றவர்கள் காம போகங்களில் பற்றுடையவர்கள் பாழ் நரகத்தில் வீழ்கின்றனர்". (பகவத் கீதை அத்யாயம் 16 ஸ்லோகம் 16)

"ஆட்சி செய்யும் விரும்பத்தகாத பழக்கத்தின் கொடுங்கோன்மையை கவிழ்த்துவிடப் போவதாக உங்களுடைய மனத்தை முதலில் நம்பவையுங்கள்; அதன்பின்பு அரசியல் அமைப்பிற்குட்பட்ட கிளர்ச்சி மற்றும் உண்மையான குற்றச்சாட்டு என்ற பணியையும் தொடங்குங்கள். சிணுங்கி அழுவதோ அல்லது துக்கமுற்ற மனப்பாங்கோ அல்லது மென்மையான எதிர்ப்போ அல்லது மூர்க்கத்தனமான அவ்வப்பொழுது செய்கின்ற கலகமோ ஒன்றுக்கும் பயனளிக்காது. குறிப்பிட்ட சில செயல்களை திரும்பத் திரும்பச் செய்வதாலேயே நீங்கள் உங்களுடைய பழக்கங்களின் படைப்பாளி ஆகின்றீர்கள்: மேலும் நீங்கள் மனஉறுதியையும், பகுத்தறிவின் விவேக சக்தியையும் விழிப்புணர்வுடன் உபயோகிப்பதன் மூலம், இதே போன்ற ஒழுங்கான முயற்சியை அமுல்படுத்தி தீங்கிழைக்கும் பழக்கங்களை ஒழிக்க வேண்டும்".



"நல்ல அல்லது தீய பழக்கங்களின் தாக்கத்திற்கு உட்படாது உள்ளுணர்வு சார்ந்த விவேகத்தால் வழி நடத்தப்படும்பகுத்தறிவினால் ஒருவருடைய செயல்கள் ஆட்சி செய்யப்படுவது எல்லையற்ற இச்சா சக்தியைக் கொடுக்கின்றது. பகவான் கிருஷ்ணன் கூறுகிறார்: "அர்ஜூனா, இந்திரியங்களை மனதால் அடக்கிப் பற்றற்று, கர்மேந்திரியங்களைக் கொண்டு கர்மயோகம் செய்பவன் மேலானவனே". (பகவத் கீதை அத்யாயம் 3 ஸ்லோகம் 7) இவ்விதமான சக்தியுடைய ஒருவன் உடனடியாக ஒரு புதிய பழக்கத்தைத் தனது மூளையில் நிலைநாட்டவோ அல்லது நினைத்த உடனே ஒன்றை நிறுத்தவோ முடியும். ஓர் இலட்சியக் குடியரசில். எந்தவித மேலதிகாரத் தூண்டுதலோ அல்லது இதர புறத்தாக்கங்களோ இன்றி, நல்ல விதிமுறைகளுக்கு பகுத்தறிவுடன் கூடிய மனமுவந்த கீழ்படிதல் ஏற்கனவே இருப்பதாகக் கருதப்படுகிறது. இதுபோலவே, ஒரு விவேகி உண்மையாகவே சுதந்திரம் உள்ள ஒருவர், பழக்கத்தின் நிர்பந்தத்தினால் அல்லாமல், சுதந்திரமான மற்றும் விவேகமான விருப்பத்தினால் தவறைத் தவிர்த்து நல்லவற்றைச் செய்கிறார். இப்படிப்பட்ட ஒருவர் ஒரு நல்ல பழக்கத்தினால் கூட தான் ஆதிக்கம் செய்யப்படுவதை அனுமதிப்பதில்லை.

அப்படிச் செய்யும்பொழுது ஒரு செயலை தேர்ந்தெடுப்பதற்கான தனது முழுபகுத்தாராயும் திறனைப் பயன்படுத்துவதில் தவறிவிடாமல் இருக்கிறார். ஒரு நல்ல பழக்கம், அதைத் தூக்கி எறிவதற்கான எந்தத் தீய சபலமும் இருந்ததில்லை என்ற எளிய காரணத்தினால் நடைமுறையில் இருக்கக்கூடும். இவ்வாறாக நிலை பெற்றுள்ள ஒரு நல்ல பழக்கம், ஒருவருடைய இயல்பில் அவசியம் நிரந்தரமாக ஸ்திரப்பட்டிருக்கும் என்பதில்லை. ஏனெனில் அது பகுத்தாராய்ந்து தேர்ந்தெடுத்தல் மற்றும் விவேகத்தினால் அல்லாமல் அனுகூலமான சூழ்நிலையின் பயனாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

குருதேவர் மேலும் கூறுகிறார்: "நல்ல பழக்கங்கள் உங்களுடைய சிறந்த உதவியாளர்கள். நற்செயல்களால் அவற்றைக் கிளர்ச்சியூட்டி அவற்றின் ஆற்றலைச் சேமித்து வைய்யுங்கள் தீயபழக்கங்கள் உங்களுடைய மிக மோசமான எதிரிகள், அவை உங் கள் இச்சாசக்திக்கு எதிராக உங்களை மிகவும் துன்புறுத்தும் செயல்களைச் செய்யவைக்கின்றன.

அவை உங்களுடைய சரீர, சமுதாய, மன, நல்லொழுக்கம் மற்றும் ஆன்மீக மகிழ்ச்சிக்குத் தீங்கு விளைவிக்கும். தீய

54
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக


ஆன்மிகமலர் மெயில் புக்

பழக்கங்களுக்கு, தீயச்செயல்கள் என்ற உணவைக்கொடுக்க மறுத்து அவற்றைப் பட்டினி போடுங்கள்”.

இறைவனை உணர்ந்த ஒருவர் அன்றாடம் பொழுது விடிந்தது முதல் பொழுதுபோகும்வரை செய்யும் ஒவ்வொரு நல்ல, தீய செயல்களானாலும் சரி எண்ணங்களானாலும் சரி அவை அவருக்கு நன்றாகவே தெரியவரும். ஒருவேளை ஒரு தீய எண்ணம் வரும்போதே அது வளர்ந்து வார்த்தையாகி அவை செயலாகி முடிவடையும் முன்னரே அதை முறியடிக்கவேண்டும். ’முளையிலே கிள்ளிவிடவில்லை என்றால், கோடாரியாலும் வெட்ட முடியாது’ என்ற பழமொழிக்கேற்ப அந்த எண்ணம் முளைவிட்ட உடனேயே அதை அழித்து விடவேண்டும்.

அவ்வாறு அழிக்கும்போது அது வளராமல் போய்விடும். இறைவனை அறிந்துணர்ந்தவர்கள் பிரபஞ்சத்தந்தையாகின்ற இறைவனுக்குக் கட்டுப்பட்டு வாழவர். அவனை அதிகமாக நேசிக்கும்பொழுது கட்டுப்பாடு தானாகவே வரும். அவன் நம் தவறுகளை அன்றாடம் சுட்டிக்காட்டிக்கொண்டுதான் இருக்கிறான். ஆனால் இவ்வாறு உணர்த்துவதை அனைவராலும் புரிந்துகொள்ள முடியாது, அதற்கு இறைவனின் அருளாசி இருந்தால் மட்டும்தான் முடியும்.

அவனுடைய அருளாசி இருக்கவேண்டுமென் றால் அவனை நேசிக்கவேண்டும். அவனிடம் மனபூர்வமாக விசுவாசம் கொள்ள வேண்டும். அதற்கு மேலாக யாரையும் நேசிக்கவோ விசுவாசம் கொள்ளவோ முடியாது என்ற மனநிலை ஒருவனுக்கு வரும்பொழுது ’ இறைவன்தான்; அவன் மட்டும்தான் உலகம்’ என்று இறைவனை நினைக்கத் தோன்றும். அவனுக்கு மேலான எந்த ஒரு பொருளும் இவ்வுலகத்தில் மட்டுமல்ல வேறு எந்த உலகத்திலும் இல்லை என்ற மன உறுதியும் மனப்பாங்கும் உள்ள ஒருவனால் மட்டும்தான் அன்றாட வாழ்க்கையில் நிகழுவது ’நன்மையா அல்லது தீமையா’ என்பதை பிரித்தறிந்து வாழ்க்கை நடந்த இயலும். அதற்குமேல் அவனுடைய மனதில் எதற்கும் இடமில்லை. இறைவனைத் தவிர வேறு எந்தப் பொருளுக்கும் அவன் மனதில் இடமில்லை என்பதுதான் பொருள். அவன் இறை இருப்பை உணர்ந்துகொண்டவனாக இருப்பான். இந்த நிலையை எய்தியவன் சமநோக்குடையவனாகவும் இருப்பான்.

பகவத் கீதா உபதேசத்தின்பொழுது அர்ஜூனன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஒரு கேள்வி எழுப்பினான்:

"பகவானே! நீங்கள் இது வரையில் ஸகு ணமும் ஸாகாரமுமான சொரூபத்தையும், நிர் குண நிராகார சொரூபத்தையும் தியானம் செய்பவர்களை அறிமுகப்படுத்தினீர்கள் ஆனால் இவர்கள் உலகத்தை எந்த நோக்கத்தோடு பார்க்கிறார்கள் என்பதை சொல்லவில்லையே? பகவானே! இப்போது சொல்லுங்கள் தம் சொரூபத்தைத் தியானம் செய்துவரும் யோகி இந்த உலகத்தை எப்படிப்பார்க்கிறார்?”

அதற்கு ஸ்ரீ கிருஷ்ணன் பதில் அருளுகிறார்: "தியானயோகத்தில் ஈடுப்பட்டிருக்கும் உள்ளப் பாங்கு கொண்ட யோகி தம்மைத்தாமே (தம் சொரூபத்தையே) எல்லா உயிர்களிடமும் பார்க்கிறார். எல்லா பிராணிகளையும் தம்மிடம் பார்க்கிறார். இதனாலேயே அவர் சமநோக்கு. சமசிந்தனைகொண்ட ’சமதர்சி’ என்று போற்றப் பெறுகிறார்.” (பகவத் கீதை அத்தியாயம் 6 ஸ்லோகம் 29) இதை மனதில் கொண்டு ஒரு பக்தன் இருப்பானேயானால் அவன் இறைவனின் சாம்ராஜ்யமாகின்ற வீடுபேறு அடைவான். அவன் முக்தி அடைவான் எனப் பொருள்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா
Cell No.9894595909




aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும் இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
ஆன்மிகமலர்
கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள், உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில் பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.
அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

**ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்**

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

# கொள்கை வேண்டுமா? உணர்ச்சி வேண்டுமா

உணர்ச்சி. இதைப் பற்றியதே இக்கருத்து. உணர்ச்சியில்லாத மனிதன் குப்பையில் கிடக்கும் ஒரு பொருளுக்கு சமம். ஆனால் இந்த உணர்ச்சியை மனிதன் எப்பொழுது உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று யோசித்துக் கொள்ள வேண்டும் தெரியுமா? சுகபோகங்களை அனுபவிக்கும் பொழுது மட்டுமே உணர்ச்சிகளை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அப்பொழுது உணர்ச்சி இல்லையென்றும் மனிதன் சாப்பிடக்கூடிய பொருள்களுக்கெல்லாம் ருசி இருக்காது. அல்லது ருசி இருந்தாலும் ருசி தெரியாது.

ருசி இல்லாத பொருள்களை மனிதன் அனுபவிக்க மாட்டான் இதுவே மனிதனின் சிந்தனை. பொருள்களில் ருசி இருந்து அனுபவிக்கும் மனிதனிடம் அந்த உணர்வு இல்லையென்றால் அவனுக்கு வியாதி என்று பொருள். இக்கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டு நடந்த சில மாதங்களுக்கு முன் இந்தியாவில் நடந்து முடிந்த அரசியலை எண்ணிப் பார்.

அரசியல் பொருளாதாரம் போன்ற கருத்துக்கள் எல்லாம் சிந்தனை செய்வதற்கு உரிய கருத்துக்களே உணச்சி வசப்படக் கூடிய கருத்துக்கள் அல்ல.

அதனால் அவைகளுக்கு கொள்கைகள் என்று பெயர். இப்பொழுது நான் சொல்லுவதை வைத்துக் கொண்டு சிந்தி.



அரசியலிலே ‘கொள்கை அரசியல்’ என்றும் உணர்ச்சி அரசியல் என்றும் இரண்டு வகை உண்டு. அரசியல் துறை சிந்தனை செய்ய வேண்டிய துறையே. அதனால் நாட்டில் அனைவரும் கொள்கை அரசியலையே நடத்த வேண்டும். அரசியலை சாப்பிட முடியுமா? முடியாது என்பதால் அந்த இடத்தில் உணர்ச்சி அரசியலை நடத்தக் கூடாது. கொள்கை அரசியலையே நடத்த வேண்டும்.

நல்ல மனிதர்கள் பிரச்சினைகளை தீர்க்கும் முறையையே யோசிப்பார்கள். பிரச்சினையைத் தீர்க்கவிடாமல் உணர்ச்சி அரசியலையே தொடர்ந்து நடத்தினால் அந்த மனிதன் நல்லவன் அல்ல என்பதை வீரர்கள் உணர வேண்டும். இது சிந்தனைக்கு உரிய ஒரு சிந்தனை என்று அறி.

மனிதன் தனது மூளையைக் கொண்டு சிந்திக்கின்ற சிந்தனைக்கு எல்லாம் கொள்கையே உடம்பு. உணர்ச்சி அதற்கு அங்கமல்ல. இந்தியாவில் துரதிர்ஷ்டவசமாக பல மொழி, மதம், இனம் இன்ன பிற கொள்கைகளுக்கெல்லாம் கொள்கையை வகுத்து அரசியலைக் காண்பதில்லை. உணர்ச்சியை வகுத்து கொள்கையைப் பார்க்க முடியாமல் தவிக்கிறார்கள். வீரனே இதுதான் கெள்கையின் தத்துவம்.

இன்றைய தினம் மக்கள் நாட்டு நடப்பிற்கு கொள்கை வேண்டுமா? உணர்ச்சி வேண்டுமா என்று யோசிக்க வேண்டும். யோசித்தால் அனைவரும் வலிமை பெறுவார்கள்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு
சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன்,
போன் 098410 28028

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்


ஆன்மிகமலர் மெயில் புக்

# கலியுகமும் பாகவத புராணமும்

5000 ஆண்டுகளுக்கு முன் வேதவியாசர் அருளிய ஓர் உத்தம நூலில் கலியுகத்தைப் பற்றிய குறிப்புகள் அத்தனையும் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது.

மிகவும் வியக்கத்தக்க ஒன்றாகும்.

ஆச்சரியப்பட தயாராக இருங்கள்.

1. கலியுகத்தின் தாக்கத்தால் அறநெறி, உண்மை, தூய்மை, பொறுமை, கருணை, ஆயுள்காலம், உடல்வலிமை, ஞாபகசக்தி ஆகிய அனைத்தும் மனிதர்களிடையே நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வரும்.

– [பாகவத புராணம் 12.2.1]

2. கலியுகத்தில், பொருட்செல்வம் மட்டுமே ஒரு மனிதனின் மதிப்பை அளவிடும். மற்றபடி ஒருவனின் முறை யான பழக்கவழக்கங்கள் மற்றும் நல்ல பண்புகள் அடிப்படையில் அவன் மதிப் பிடப்படுவதில்லை. மேலும், சட்டமும் நீதியும் ஒருவனின் அதிகாரத்தின் அடிப் படையிலே செயல்படும்.

– [பாகவத புராணம் 12.2.2]

3. ஆண்களும் பெண்களும் வெறும் உடல் உறவுக்காக மட்டுமே தொடர்பு கொண்டிருப்பார்கள். தொழில்துறைகளில் வெற்றி என்பது வஞ்சகமும் சூழ்ச்சியும் நிறைந்திருக்கும்.

– [பாகவத புராணம் 12.2.36)

4. ஒருவரின் புறத்தோற்றத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டு அவரை பண்டிதர் என்று மக்கள் நம்புவார்கள். கண்களால் காணும் வித்தைகளுக்கு மயங்கி தவறான போலிகுருக்களை நம்பி வழிதவறி செல்வார்கள். வெறும் வாய் வார்த்தைகளில் ஜாலங்கள் செய்பவர் கற்றுணர்ந்த பண்டிதராக போற்றப்படுவார்.

– [பாகவத புராணம் 12.2.4]

5. கலியுகத்தின் பிடியில் சிக்கியிருக்கும் சிலர் பொருட்செல்வம் (பணம்) இல்லாதவனைத் தீண்டத்தகாதவன் என்று வெறுத்து ஒதுக்குவர். குளிப்பதாலும் அலங்காரம் செய்து கொள்வதாலும் மட்டுமேஒருவன் சுத்தமடைந்து விட்டான் என எண்ணிக் கொள்வான்.

– [பாகவத புராணம் 12.2.5]

6.அலங்காரம் செய்தவனெல்லாம்அழகானவன் என்றறியப்படுவான். முரட்டுத்தனமான பேச்சு உண்மை என்று எளிதில் நம்பப்படும். வயிற்றை நிரப்புவது மட்டுமே வாழ்க்கையின் குறிக்கோளாக அமையும். பல மதங்கள் ஆட்களை சேர்த்துக் கொள்வதையும் பெருக்கிக் கொள்வதையும் மட்டுமே லட்சியமாக கொண்டிருக்கும்.

– [பாகவத புராணம் 12.2.6]

7.உலகத்தில் ஊழல் நிறைந்த அரசியல்வாதிகள் நிறைந்துவிடுவர். தன் சமூகத்தினிடையே தன்னை பலமானவன் என்று காட்டிக்கொள்பவன் அரசாளும் அதிகாரத்தைப் பெற்றிடுவான்.

– [பாகவத புராணம் 12.2.7]

8. ஊழல் நிறைந்த அரசாங்கத்தால் நியாயமற்ற கொடுமையான வரிகள் மக்கள் மீது வசூலிக்கப்படும். இதனால் மக்கள் உண்ண உணவின்றி இலை, வேர், விதை போன்றவற்றை உண்ணத் தொடங்குவார்கள். (அரசின் அலட்சியப் போக்கினால்) கடுமையான பருவநிலை மாற்றத்திற்கு ஆளாகி துன்பமிகு வாழ்க்கையில் சிக்கிக்கொள்வார்கள்.

– [பாகவத புராணம் 12.2.9]

9.கடுங்குளிர், புயல், கடும்வெப்பம், கனமழை, உறைபனி, வெள்ளம் போன்ற பல இயற்கை பேரிடர் களில் சிக்கி மக்கள் தவிப்பார்கள். இதனால் பசி, தாகம், நோய், பயம், சச்சரவு போன்ற கடுந்துன்பங்களிலும்சிக்கிக் கொள்வார்கள்.

– [பாகவத புராணம் 12.2.10]

10. கலியுகத்தின் கொடுமை அதிகரிக்கையில், மனிதர்களின் சராசரி ஆயுள் காலம் 50 ஆண்டுகளாக குறையும்.

– [பாகவத புராணம் 12.2.11]

11. தன்னை ஊட்டி வளர்த்த பெற்றோர்களை இறுதிகாலத்தில் கவனித்துக் கொள்ளும் தர்மத்தை மகன் மறப்பான்.

– [பாகவத புராணம் 12.3.42]

12. பொருளுக்காக மனிதன் இன்னொரு மனிதனிடம் வெறுப்பு, பொறாமை போன்ற உணர்ச்சிகளை வளர்த்துக் கொள்வான். நட்பு என்ற உயரிய பண்பை போற்றாமல், தன் சுற்றத்தாரையும் உறவினரையும் கூட கொல்லத் துணிவான்.

– [பாகவத புராணம் 12.3.41]

13. வெறும் பகட்டுக்காகவும் புகழுக்காகவும் மட்டுமே தானம் அளிப்பார்கள். தற்பெருமைக்காக மட்டுமே நோன்பு இருப்பார்கள். தர்மத்தைப் பற்றிய அறிவாற்றல் இல்லாதவர்கள் மதங்களை உருவாக்கி மக்களைக் கவர்ந்து தவறான அதர்ம பாதைக்கு இழுத்துச் செல்வார்கள்.

– [பாகவத புராணம் 12.3.38]

14. தனக்கு இனி பயன்பட மாட்டான் என்ற பட்சத்தில் தனக்கு இத்தனை காலமாக உழைத்து தந்த தொழிலாளிகளை முதலாளி கைவிடுவான். இத்தனை காலம் பால்கொடுத்தபசு பால் கொடுப்பது குறைந்துவிட்டால் அப்பசுக்களும் கொல்லப்படும். நன்றிகடன் மறக்கப்படும்.

– [பாகவத புராணம் 12.3.36]

15. நகரங்களில் கொள்ளையர்கள் அதிகரிப்பர்; வேதங்கள் கயவர்களால் தங்கள் சுயநல கோட்பாடுகளைப் பரப்ப பொய்யான முறையில் மொழிப்பெயர்க்கப்படும். அரசியல்வாதிகள் மக்களை மெல்லமெல்ல பலவிதமாக கொடுமை செய்வார்கள். போலி ஆசாரியர்கள் தோன்றி பக்தர்களை உபயோகப்படுத்தி தங்கள் வயிறுகளையும் காமத்தையும் பூர்த்தி செய்து கொள்வார்கள்.

– [பாகவத புராணம் 12.3.32]



# சிலைகளை கற்களில் வடிவமைத்த ரகசியம்

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்




ஆகம விதிகளின் படி கருங்கல்லால் கட்டப்பட்ட பழங்காலக் கோவில்களிலும் வேத, ஆகம, சிற்ப சாஸ்திர முறைப்படி, யந்திர ஸ்தாபனம் செய்து, தெய்வ உருவங்களை கருங்கல் சிலையாக பிரதிஷ்டித்து தினமும் முறையாக பூஜை செய்து வரும் கோவில்களுக்கு நாம் சென்று தரிசனம் செய்யும் வேளையில், நம் உடலில் ஓர் சக்தி ஊடுருவிச் செல்வத்தை அனுபவ பூர்வமாக பலரும் உணரலாம். ஆகவே தான், பெரும்பாலும் சிலைகளை கருங்கல்லில் வடிவமைக்கிறார்கள்.

பெரும்பாலும் தெய்வ சிலைளை உலோகங்களில் செய்யாமல், கருங் கல்லால் சிலை செய்கிறார்கள்.

அதற்கு முக்கியமான கரணம் உண்டு.

உலோகத்தின் ஆற்றலை விட கருங்கல்லின் ஆற்றல் பல மடங்கு அதிகமானது. எந்த சக்தியையும் தன் வசம் இழுத்துக் கொள்ளும் தன்மை உடையது கருங்கல். இதில் நீர்,நிலம் ,நெருப்பு ,காற்று,ஆகாயம் எனும் பஞ்ச பூத தன்மைகள் அடங்கியுள்ளது.

இது வேறு எந்த உலோகத்திலும் வெளிபடுவது இல்லை.

**நீர்:** கல்லில் நீர் உள்ளது. எனவே தன் தனது இயல்பான குளிர்ந்த நிலையிலிருந்து மாறாமலிருக்கிறது. கல்லில் நீருற்று இருப்பதை காணலாம்.

**நிலம்:** பஞ்ச பூதங்களில் தத்துவங்களில் ஒன்றான நிலம் உள்ளது. எனவே கல்லில் செடி கொடிகள் வளர் கின்றன.

**நெருப்பு:** கல்லில் நெருப்பின் அம்சமும் உண்டு. கற்களை உரசினால் தீப்பொறி பறக்கிறதே சான்று.

**காற்று:** கல்லில் காற்று உண்டு. எனவே தான் கல்லில் தேரை கூட உயிர் வாழ்கிறது.

**ஆகாயம்:** ஆகாயத்தைப் போல் வெளியிலிருக்கும் சப்தத்தை தனக்கே ஒடுக்கி பின் வெளியிடும் சக்தி கல்லுக்கு உண்டு.

எனவே தான் கருங்கல்லில் கட்டப்பட்ட’கோவில்களில் நாம் கூறுவதை எதிரொலிக்கும் அதிசயம் நடக்கிறது.

திருவையாறு ஐயாரப்பன் கோவிலில் நாம் பேசுவது அப்படியே எதிரொலிப்பதை நாம் ஆனந்தமாக கேட்டு மகிழலாம். இக்காரணங்களினால், இறை வடிவங்களை பஞ்ச பூதங்களின் (ஐம் பூதங்களின்) வடிவில் இருக் கும் கருங்கல்லில் வடிவமைத்து வழிபாடு செய்கி றோம்.

அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனைகள் முறைப்படி செய்யும் போது, ஒரு கோவிலின் பஞ்சபூதங்களின் தன்மை அதிகரிக் கின்றன. அக்கோவிலில் நாம் வணங்கும் போது, நம் உடலில் நல்ல அதிர்வுகள் உண்டாகி, அதன் மூலம் நம் வாழ்வில் நல்ல பலன்கள் உண்டாகின்றன.



# ஆடையின் வண்ணமும் தெய்வீக எண்ணமும்

வார நாள், பண்டிகை, உற்சவம் மற்றும் விரதம் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட நிறத்தில் ஆடையை அணிவதால் என்ன பயன் கிடைக்கிறது?

நாள், பண்டிகை, உற்சவம் மற்றும் விரதம் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட நிறத்தில் ஆடையை அணிவதால் அந்தந்த தெய்வத்தின் தத்துவத்தின் பயன் கிடைக்கிறது. இந்த செயல்பாடு எவ்வாறு நடக்கிறது என்பதைப் பற்றி இக்கட்டுரையில் சிறிது தெரிந்து கொள்வோம்.

1. நாள், பண்டிகை, உற்சவம் மற்றும் விரதம் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட தெய்வ தத்துவத்திற்கு நெருக்கமான நிறத்தில் ஆடையை அணிவதால் அந்த தெய்வ தத்துவத்தின் பயன் கிடைக்கிறது

வாரத்திலுள்ள ஏழு நாட்கள் ஒவ்வொரு தெய்வத்தின் உபாசனைக்கு உகந்த நாட்களாகும். ஒரு குறிப்பிட்ட நாளின் சூழலில் அந்நாளுடன் சம்பந்தப்பட்ட தெய்வ தத்துவம் அதிக அளவில் செயல்பாட்டில் உள்ளது. பண்டிகை, உற்சவம் மற்றும் விரதம் போன்றவற்றிற்கும் இது பொருந்தும். அந்நாளில் அத்துடன் சம்பந்தப்பட்ட தெய்வ தத்துவம் அதிக அளவில் செயல்பாட்டில் இருக்கும். அந்த தெய்வ தத்துவத்துடன் நெருங்கிய தொடர்புடைய நிறம் கொண்ட ஆடையை அணிந்து கொள்வதால் சம்பந்தப்பட்ட தெய்வ தத்துவம் அதிக அளவில் ஆகர்ஷிக்கப்படுகிறது. சாதாரணமாகவே இது போன்று ஆடை அணிபவர்களுக்கு தெய்வ தத்துவங்களின் பயன் அதிக அளவு கிடைக்கிறது. (படம் 1)

## கிழமையுடன் சம்பந்தப்பட்ட தெய்வம் மற்றும் உகந்த ஆடை நிறம்

படம் 1

| கிழமை | தெய்வம் | ஆடையின் நிறம் | தன்மை |
|---|---|---|---|
| திங்கள் | சங்கரன் | வெள்ளை | வைராக்கியம் |
| செவ்வாய் | ஸ்ரீ லக்ஷ்மி ஸ்ரீ கணபதி | மஞ்சள் சிந்தூரம் | சைதன்யம் ஞானம் |
| புதன் | பாண்டுரங்கன் | நீலம் | பக்தி |
| வியாழன் | தத்தா | வெளிர் மர நிறம் | விரக்தி |
| வெள்ளி | பார்வதி ஸ்ரீ லக்ஷ்மி | மஞ்சள் கலந்த ஆரஞ்சு | அதிக சக்தியைத் தரும் தேஜஸ் |
| சனி | மாருதி | சிவப்பு கலந்த ஆரஞ்சு | கதிக்கு ஒரு உந்துதல் |
| ஞாயிறு | சூரியன் | சிவப்பு | சக்தி |


www.aanmeegamalar.com





வாரத்தில் நிர்குணத்திலிருந்து ஸகுணத்திற்கு செல்லும்போது நிறத்தில் ஏற்படும் மாறுதல்கள்

செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய இரு நாட்களும் தேவிக்குரிய நாட்களாக இருக்கும் பட்சத்தில் நிறம் மற்றும் அது வெளிப்படுத்தும் விஷயம் ஏன் மாறுபடுகிறது?

ஒரு வித்வான்: திங்கட்கிழமை லயத்தின் வெளிப்பாடான ஐக்கியத்தின், அதாவது சிவனின் நிர்குண தத்துவத்தின், எல்லாவற்றையும் உள்ளடக்கிய தன்மையின் சின்னமாக விளங்குவதால் அதற்கு உகந்த வெள்ளை நிறத்தில் ஆரம்பிக்கிறது.

பிறகு ஸகுணத்தை நோக்கி செல்லும் பிரவாகம் படிப்படியாக ஞாயிற்றுக்கிழமை அன்று தாழ் நிலையிலுள்ள சிவப்பு நிறத்தின் உதவியால் சக்திரூபமான ஸகுணத்தை வந்தடைகிறது. திங்களுக்கு பிறகு உடனே வரும் செவ்வாய் நிர்குணஸகுண தத்துவத்தின் சின்னமாக இருப்பதால் அது காரியங்களை நடத்துவிக்கும் சைதன்யத்தின் சின்னமாக உள்ளது; அதனால் அதன் நிறம் மஞ்சள். அன்றைய தினத்தில் தேவி, காக்கும் உணர்வுடனும் பின்பு ஸகுண நிலையில் சக்தியிடம் ஈர்க்கப்படும் தத்துவத்தின் உதவியால் அழிக்கும் சக்தியாகவும் செயல்படுகிறாள்; அதனால் வெள்ளியன்று பிரம்மாண்டத்திலிருந்து வெளிப்படும் தத்துவம் சக்தி தரும் தேஜ தத்துவத்துடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது; இக்காரணத்தால் வெள்ளியன்று மஞ்சள் கலந்த ஆரஞ்சு நிறம் ஏற்றது. எப்பொழுது ஸகுண அளவில் செயல்படும் வேளை நெருங்குகிறதோ அப்பொழுது தத்துவத்திலுள்ள செயல்படும் கதி அதிகமாகிறது.

3. பண்டிகையோடு சம்பந்தப்பட்ட தெய்வ தத்துவத்திற்கு நெருக்கமாக உள்ள நிறத்தில் ஆடை அணிந்தபோது ஒரு பெண் ஸாதகருக்கு ஏற்பட்ட அநுபூதி

3 அ. ஸ்ரீ கணேச சதுர்த்தியன்று சிந்தூர நிறத்தில் (ஸ்ரீ கணேசரின் நிறம்) ஆடை அணிந்தவுடன் ஏற்பட்ட ஆன்மீக உபாயம்

'ஸ்ரீ கணேச சதுர்த்திக்கு முந்தைய இரவு என்மனதில் ஒரு எண்ணம் தோன்றியது, 'இப்பொழுது கணேச அதிர்வலைகள் பூமியில் ஆகர்ஷிக்கப்படும் பிரமாணம் அதிகரிக்கும்; ஆனால் இவ்வாறு ஆகர்ஷிக்கப்பட்டுள்ளது என்பதை நான் எவ்வாறு உணர்வது? இந்த அதிர்வலைகள் எவ்வாறு இருக்கும்?' ஸ்ரீ கணேச சதுர்த்தியன்று காலை நான் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென்று என் மீது ஆன்மீக உபாயம் நடந்து கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது. எனக்கு ஏன் அப்படி தோன்றுகிறது என ஆராயும்போது நான் போட்டுக் கொண்டிருந்த சிந்தூர நிற ஆடையிலிருந்து எனக்கு ஆன்மீக உபாயம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை உணர முடிந்தது. நான் அணிந்திருந்த சிந்தூர நிறம் ஸ்ரீ கணேசருக்கு உகந்த நிறம் என்பதும் கவனத்திற்கு வந்தது. அப்பொழுது என்னிடமிருந்து ஏப்பம் வரத் துவங்கியது. அதன் மூலம் எனக்குள்ளிருந்த கருப்பு சக்தி வெளியேறியது. 'ஸ்ரீ கணேச சதுர்த்தியன்று நான் அணிந்துள்ள ஆடையின் நிறம் மற்றும் என் மீது நடக்கும் ஆன்மீக உபாயம்' ஆகியவற்றிற்கு உள்ள பரஸ்பர சம்பந்தம் விஷயமாக எனக்கு வழிகாட்டுதல் வேண்டும் என்பதற்காக பராத்பர குரு டாக்டரிடம் சென்றேன். அறையின் உள்ளே நுழைந்தவுடன் பராத்பர குரு டாக்டர் கேட்டார், 'இன்று என்ன கணபதியின் நிற ஆடையை அணிந்திருக்கிறாயா?' அந்த க்ஷணம் நான் உணர்ந்த அனைத்தும் உண்மை என்பது தெளிவாகியது. பிறகு அவரிடம் எனக்கு ஏற்பட்ட அனுபூதியை பகிர்ந்து கொண்டேன். அதற்கு அவர் 'மேற்கொண்டும் பண்டிகை அல்லது கிழமைகளில் அதற்குரிய தெய்வத்தின் நிறத்தில் ஆடை அணிவதால் என்ன பரிணாமம் ஏற்படுகிறது என்று பயிற்சி செய்வதற்கு ஒரு நல்ல உதாரணம் கிடைத்தது' என்றார். திருமதி யோகேஸ்ரீ கோளே, சிங்கப்பூர்.

3 ஆ. உபாசனை தெய்வத்திற்கு ஏற்ப உபாசகர்கள் அணிந்து கொள்ள வேண்டிய ஆடையின் நிறம் உபாசனைக்குரிய தெய்வம்ஆ டை யி ன் நிறம்


ஆன்மிகமலர் மெயில் புக்

‘பக்திவழிக்குரிய உபாசனை தெய்வம் அ.ரிஷி ஆ.சர்வ சாதாரண கீழ்நிலை தெய்வம் இ.அப்ஸரா, யக்ஷ, கின்னர மற்றும் கீழ்நிலை தெய்வம் ஈ. உயர் நிலை தெய்வம் கேசரி சிவப்பு ஆரஞ்சுவெள்ளை மற்றும் மஞ்சள்

தாந்த்ரீகர்களின் உபாசனை தெய்வம் அ. சர்வ சாதாரண தாந்த்ரீகன் ஆ. மாயாவி மாந்த்ரீகன் இ. மோகினி மாந்த்ரீகன் கருப்பு பளீரென்ற மஞ்சள் ரோஸ்’

குறிப்பு தாந்த்ரீக உபாசகர்கள் பற்றிய (அகோரி வழியில் உபாசனை செய்பவர்கள்) தகவல் வெறும் விஷய பூர்த்திக்காக கொடுக்கப்பட்டுள்ளது. சர்வ சாதாரண பூஜகருக்கு இந்த தகவல் தேவையில்லை.

4. ஹிந்து தர்மத்தில் கருப்பு நிறம் விலக்கப்பட்டுள்ளது.

‘ஸ்நானம் தானம் தபோ ஹோம:
பித்ருயக்ஞச்ச தர்பணம் |
பஞ்ச தஸ்ய வ்ருதா யக்ஞா கிருஷ்ணவர்ணச்ய
தாரணாத் || (ஸ்ம்ருதிவசன்)

விளக்கம்: ஸந்த்யா, ஸ்நானம், தானம் தவம், ஹோமம், பித்ருயக்ஞம், தர்ப்பணம் ஆகிய தார்மீக காரியங்களை கருப்பு ஆடை அணிந்து கொண்டு செய்தால் அவை உபயோகமில்லாமல் போகின்றன.

ஹிந்து பெண்கள்ஆண்களுக்கு கருப்பு ஆடை விலக்கப்பட்டுள்ளது. கருப்பு நூல் ஆடையை அணிவது நல்ல ஆசாரம் இல்லை, ஆசாரத்திற்கு விரோதமானது ஆகும். கருப்பு நிற நூலால் நெய்யப்பட்ட ஆடையை அணிவது பாதகமான செயலாகும். கருப்பு நிற தலைப்பாகை, தொப்பி, கைக்குட்டை, ஷர்ட், புடவை ஆகியவற்றை அணிவது சாஸ்திரபற்றுள்ள ஸ்ரத்தையுள்ள ஹிந்துக்களுக்கு துக்கம் தரக்கூடிய செயலாகும். தண்ணீரில் பிழிந்தெடுக்கப்பட்ட ஆடைகள் மடி வஸ்திரங்களுக்கு உகந்தது; ஆனால் கருப்பு நிற ஆடை தண்ணீரில் நனைக்கப்பட்டிருந்தாலும் எந்த ஒரு பவித்ர காரியத்திலும் உபயோகிப்பதற்கு உகந்தது அல்ல. கருப்பு நிற ஆடை அணிந்து சமைப்பது மற்றும் பரிமாறுவது ஆகியவையும் விலக்கப்பட்ட செயல்களாகும்.’ குருதேவ் டாக்டர் காடேஸ்வாமிஜி

தகவல் : ஸனாதனின் நூல் ‘ஆன்மீக கண்ணோட்டப்படி ஆடைகள் எவ்வாறு இருக்க வேண்டும்?’

# விஷ்ணுவின் இடுப்பு பகுதியே காஞ்சி வரதராஜர்

பிரும்மாவின் யாகத்தின்போது ஹோமகுண்டத்தில் இருந்து தோன்றியவர் வரதராஜப் பெருமாள்.

சம்ஸ்கிருதத்தில் 'க' என்றால் பிரும்மா, 'அஞ்சி' என்றால் பூஜிக்கப்பட்டது. க + அஞ்சி 'காஞ்சி.'

முக்தி தரும் ஏழு தலங்களில் காஞ்சியும் ஒன்று. இது விஷ்ணுவின் இடுப்புப் பகுதி என்று கருதப்படுகிறது. மற்ற ஆறு தலங்களும், அவை குறிக்கும் பக வானின் உடல் உறுப்புகளும் வருமாறு:

அவந்தி ............................பாதம்,
துவாரகை .........................தொப்புள்,
ஹரித்வார் .........................மார்பு,
மதுரா ...............................கழுத்து,
காசி.................................மூக்கு,
அயோத்தி .........................தலை.

இந்தப் பெருமாளை கிருதயுகத்தில் பிரும்மாவும், த்ரேதா யுகத்தில் கஜேந்திரன் என்ற யானையும், துவாபர யுகத்தில் பிரஹஸ்பதியும், கலியுகத்தில் அனந்தனும் (ஆதிசேஷன்) வழிபட்டதாக ஐதீகம்.

ஒருமுறை பிரம்மாவிடம் கோபித்துக்கொண்டு, சரஸ்வதி அவரு டைய சிருஷ்டி தண்டத்தைப் பறித்து விட்டார். அதனால் பிரம்மாவால் படைப்புத் தொழிலைச் செய்ய முடியவில்லை. அவர் விஷ்ணுவிடம் வேண்ட, விஷ்ணு அவரை 100 அஸ்வமேத யாகம் செய்ய வேண்டும் அல்லது காஞ்சிபுரத்தில் ஒரு அஸ்வமேத யாகம் செய்ய வேண்டும் (ஒன்றுக்கு நூறாகப் பலன் கொடுக்கும் இடம் காஞ்சி) என்று சொல்ல, பிரம்மாவும் அவ்வாறே காஞ்சியில் தவம் மேற்கொண்டார்.

பிரம்மாவின் தவத்தைக் கலைக்க சரஸ்வதி அரக்கர்களை அனுப்பினார். அரக்கர்களை விஷ்ணு அழித்தார். (இந்த வரலாறு காஞ்சியில் உள்ள திருவெஃகா, அஷ்டபுயங்கம், திருத்தண்கா, திருப்பவளவண்ணம் ஆகிய திவ்ய தேசங்களுடனும் தொடர்புடையது.)

பிறகு, வேகவதி என்ற நதியாகப் பெருக்கெடுத்து வந்து யாகத்தைத் தடுக்க முயன்றார் சரஸ்வதி. அப்போது விஷ்ணு வேகவதி நதியின் குறுக்கே அணைபோல் படுத்துக்கொண்டு நதியைத் தடுக்க, தோல்வியடைந்த சரஸ்வதி, பூமிக்குள் மறைந்தார்.

பிரம்மா யாகத்தை நிறைவு செய்ததும், யாகத்தீயிலிருந்து தீப் பிழம்பாக வெளிப்பட்ட விஷ்ணு, பிரம்மாவுக்கு சிருஷ்டி தண்டத்தை அளித்தார்.

பிரம்மாவின் வேண்டுகோளின்படி யாகத்தீயில் தோன்றிய உருவத்துடன் வரதராஜன் என்ற பெயரில் புண்யகோடி விமானத்தின் கீழே கோயில் கொண்டார்.

பிருகு முனிவர் செய்த புத்திர காமேஷ்டி யாகத்தின் பலனாக அவருக்கு மகளாக அவதரித்தார் மகாலக்ஷ்மி. பெருந்தேவி என்ற பெயர் கொண்ட அவர் பொற்றாமரை மலர்களால் வரதராஜரைப் பூஜித்து வந்தார்.

சிவபெருமான், பிரும்மா, மற்ற தேவர்கள், முனிவர்கள் முன்னிலையில், வரதராஜர் பெருந்தேவியை மணந்து கொண்டார் என்பது தல புராணம்.

மூலவருக்குப் பெயர் தேவராஜன். தேவப்பெருமாள், அத்தியூரான், அத்தியூர் வரதன், தேவாதிராஜன், பேரருளாளன், கஜேந்திர வரதன், மாணிக்க வரதன், பிரணாதார்த்திஹரன் என்ற பெயர்களும் உண்டு. வரதராஜன் என்ற பெயர் உற்சவரைத்தான் குறிக்கும்.



ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்

# அன்னதானத்தின் மகிமை

# வள்ளலாரின் வாக்கு



**மிக கடும் தோஷங்களையும் குறைக்கும் மகத்தான சக்தி அன்னதானத்திற்கு உண்டு. அன்னதானம் ஒருவரின் பசியைப் போக்குவது எவ்வளவு புண்ணியம் வாய்ந்த செயல் என்று வள்ளலார் பெருமான் கூறியுள்ளார் அதைப் படித்துப் பாருங்கள்.**

- அன்னதானம் செய்யுமிடத்தில் அருளும், அன்பும் தழைத்தோங்கும், தர்மதேவதை அவ்விடத்தில் நித்தியவாசம் செய்யும். கல்வி, செல்வம், ஞானம், மகிழ்ச்சி என அனைத்து நன்மைகளும் கிடைக்கும். என்றும் நம்மைப் பாதுகாத்து துணை நிற்கும்.
- அன்னமிட்டு புண்ணியம் செய்பவர்கள் அரசாங்கத்தால் மதிக்கப்படுவர். அவர்களின் வயலில் விளைச்சல் அதிகரிக்கும். வியாபாரம் தடையின்றி நடந்து பெரும் லாபம் கிடைக்கும். அவர்கள் வீட்டில் திருட்டு நடக்காது. விரோதிகளினால் சிறிதும் பயம் ஏற்படாது.
- பசித்தவர்களுக்கு உணவிட்டவனை கோடைகால சூரியன் கூட வருத்தமாட்டான். வெம்மை மிக்க மணலும் வருத்தாது. மழை, நெருப்பு, காற்று என்று பஞ்சபூதங்களாலும் சிறுதீங்கும் உண்டாகாது.
- பசி நீங்கினால் உள்ளம் குளிரும். சித்தம் தெளியும். அகமும் முகமும் மலரும். உள்ளும் புறமும் களை உண்டாகும். கடவுள் நம்பிக்கை துளிர் விடும். தத்துவம் தழைக்கத் துவங்கும்.
- பசி என்பது ஏழைகளின் உடலில் பற்றி எரியும் நெருப்பு. அறிவாகிய விளக்கை அணைக்க முயலும் விஷக்காற்று. பாய்ந்து கொல்லப் பார்க்கும் புலி. உச்சி முதல் பாதம் வரை பாய்ந்து பரவும் விஷம்.
- பசித்த உயிர்களுக்கு உண வளித்தும், உயிர்க்கருணை செய்தும் ஜீவகாருண்ய நெறியைப் பின்பற்றினால், தனிப்பெருங்கருணை யோடு விளங்கும் அருட்பெருஞ்ஜோதி யாகிய ஆண்டவரின் அருளுக்குப் பாத்திரமாகலாம்.
- உண்மையான அன்புடன் ஒளிவடிவில் அவரை வழிபாடு செய்ய வேண்டும். தெய்வ வழிபாட்டில் ஜீவ இம்சைக்கோ, உயிர்ப் பலிக்கோ சிறிதும் இடம் இல்லை. அன்பு நெறியில் அமையும் வழிபாடே உயர்ந்த வழிபாடாகும்.
- மனிதன் வேற்று நாட்டின ரிடத்தும், வேற்று மதத்தினரி டத்தும் மட்டுமின்றி உயிரினங்கள் அனைத்தின் மீதும் அன்பு கொள்ள வேண்டும். இதுவே ஜீவகாருண்ய ஒழுக்கமாகும்.
- எந்த நேர உணவிலும், எந்த வகையிலும் மாமிசம் சேர்த்துக் கொள்ளக்கூடாது, எப்படிப்பட்ட உணவாக இருந்தாலும் குறைத்தே சாப்பிட வேண்டும். பசி எடுக்கவில்லையென்றால் உணவு எடுத்துக் கொள்ளக் கூடாது.
- ஆனால், இந்தக் காலத்தில் அன்னதானம் பண்ணினால் கூட வாங்குவதற்கு தகுதியான ஆட்கள் கிடைப்பதில்லை. பெரிய கோவில்களில் எல்லாம் அன்னதான திட்டம் வந்துவிட்டது. திருவண்ணாமலையில் உணவு ஏதாவது கொடுத்தால் காசு இருந்தால் கொடுக்கலாமே என்று கேட்கும் சாதுக்கள் தான் அதிகம். அந்த அளவுக்கு அவர்களைப் பொறுத்தவரை உணவுக்கு பஞ்சமில்லை.
- அதனால் அன்னதானம் செய்ய நினைப்பவர்கள் ஏதாவது நல்ல கோவில்களின் அன்னதான திட்டத்திற்கு உதவி செய்தால் கூட போதுமானது. அல்லது அனாதை / முதியோர் காப்பகங்களுக்கு நன்கொடை அளிக்கலாம். அல்லது பசுவிற்கு வாழைப்பழம் அல்லது அகத்தி கீரை வாங்கி கொடுக்கலாம். இப்படி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அன்னதானம் செய்து வர, அவரவர் ஜாதகத்தில் உள்ள தோஷங்கள் படிப்படியாக குறைந்து, புண்ணிய பலன்கள் அதிகரிக்கும். வாழ்க்கையில் முன்னேற்றமும் கிடைக்கும். மனசும் வயிறும் குளிர கிடைக்கும் அந்த ஜீவன்களின் வாழ்த்து , நம் புண்ணிய பலன்களின் தட்டை கனப்படுத்தி, பாவ பலன்களின் தட்டை லேசாக்குகிறது.
- நிஜமாகவே பசிக்கு துடித்துக் கொண்டு இருக்கும் ஜீவன், உங்கள் முன் கையேந்தும்போது இறைவன் உங்களை சோதிக்கிறான் என்பதை மனதில் வையுங்கள். அந்த நேரத்தில் , உங்களால் உதவ முடிந்த சூழல் இருந்தும், முகத்தை திருப்பிக் கொண்டு சென்றால் அது நமக்கு புண்ணியம் கிடைக்கவிருக்கும் ஒரு வாய்ப்பை தவிர்ப்பதற்கு சமம்.
- நம் வீட்டில் ஏதாவது விசேஷம் , விருந்து என்றால் கூடி இருக்கும் விருந்தினர்களை மட்டும் கவனித்து, பசிக்கு துடிக்கும் எளியவர்களை துரத்தி அடிப்பது கொடிய பாவம். அது போன்று வருபவர்களுக்கு சபையில் வைத்து உணவு அளிக்க வில்லை எனினும், தனியாக அவர்களுக்கு கொடுத்து அனுப்ப முயற்சிக்கலாமே.

## பாவம் சேர்க்கும் ஆடம்பர அன்னதானம்

வலது கை கொடுப்பதை இடது கைக்கு தெரியாமல் கொடுக்க வேண்டும் என்று முன்னோர் கூறியுள்ள அற்புத வாக்கு, இந்த வாக்கின்படி, ஆடம்பரம் ஆரவாரமின்றி செய்யும் அன்னதானத்திற்கே பலன்கள் உண்டு.

பத்து பேருக்கு அன்னதானம் செய்வதை போஸ்டர் அடித்து, பெயரும் புகழும் பெறும் நோக்கில் செய்யும் எந்த தானமும் பலன் தராது.

தானம் பெறுபவர் தாழ்ந்தவர் அல்ல, கொடுப்பவர் உயர்ந்தவர் அல்ல, இரண்டு சம்பவமும் நடைபெறுவது, பூர்வஜென்ம பாவ–புண்ணிய காரணத்தால் மட்டுமே.

ஆனால் தற்போது தானம் கொடுப்பவர்கள் தங்களை மிகப்பெரிய வள்ளலாக காட்டிக்கொள்ள பல்வேறு பிரயாத்தனம் செய்து, தானம் கொடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளது வருந்தவேண்டிய ஒன்றுமட்டுமல்ல, இதனால் அவர்களுக்கு ஒருசில பிரம்மஹத்தி தோஷம் கூட ஏற்பட வாய்ப்புள்ளது.



www.aanmeegamalar.com

# மனித வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த பல்லி

# கால நேர பலனை உணர்த்தும் அதிசம்

கடவுள் மனிதர்களோடு உரையாட பல வழிகளை கொண்டுள்ளார் என்று நமது புராணங்களில் கூறப்பட்டுள்ளது. அதில் பல்லியும் ஒன்றென கூறப்படுகிறது. இதனாலேயே ஊர்வன வகையான உயிரினங்களில் ஒலியை எழுப்பும் சிறப்பு சக்தியை பல்லிக்கு மட்டுமே இறைவன் கொடுத்துள்ளார்.

பல்லியை கடவுளின் தூதன், செய்தியாளன் என நம் இதிகாசங்கள் கூறுகின்றன. பல சிறப்புக்கள் மிக்க பல்லியின் பல செயல்களுக்கு பின் பல அர்த்தங்கள் உள்ளது. நமது வீட்டில் சில இடங்களில் பல்லி கத்தினாள் நல்லது நடக்கும், சில இடங்களில் கத்தினாள் தீயவை நடக்கும் என்று கூறுவதும் இதனாலேயே.

அதுபோல பல்லி நம் உடல் மீது எங்கு விழுகிறதோ அதை பொருத்தும் தனி பலன்கள் உண்டு. பண்டைய காலத்தில் பல்லியை குறித்து ஒரு தனி படிப்பே இருந்தது என்றால் இதன் சிறப்பை பாருங்கள். அது தான் கௌளி சாஸ்திரம்.

பல்லிக்கு சில சக்திகள் இருப்பதாலேயே காஞ்சிபுரம் வரதராஜ சுவாமி கோவிலில் கர்பகிரகத்தின் மேல் கூரையில் தங்கம் மற்றும் வெள்ளியில் பல்லி உருவங்கள் இடம்பெற்றிருக்கிறது. அதே போல் ஸ்ரீரங்கம் ரங்கநாதன் சுவாமி கோவிலிலும் பல்லி வணங்கப்படுகிறது.

மேலும் பல்லி என்பது கேதுவை குறிக்கிறது. மேலும் பல்லியானது பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் எளிதாக காணக் கூடிய ஒன்று தான்.

நமது உடல் பாகங்களில் பல்லி விழுந்தால் என்னென்ன அர்த்தம் என்று தெரிந்து கொள்ளுவோம்:



## தலை

பல்லி ஒருவரின் தலையில் விழுந்தால், வரப்போகும் கெட்ட நேரத்திற்கு அவர் தன்னை தானே தேற்றிக் கொள்ள வேண்டும் என எதிர்மறையாக உணர்த்துகிறது. இவர்கள் மற்றவர்களிடம் இருந்து கடும் எதிர்ப்பு, மன நிம்மதியின்மை அல்லது 'உறவினர் அல்லது நன்கு தெரிந்தவர்' களுக்கு மரணம் ஏற்படலாம்.

## நெற்றி

நெற்றியின் இடது பக்கம் பல்லிவிழுந்தால் கீர்த்தி மற்றும் வலது பக்கம் பல்லிவிழுந்தால் லக்ஷ்மிகரம் என அர்த்தம்.

## முடி

தலையில் விழுவதற்கு பதிலாக தலையில் உள்ள முடியின் மீது விழுந்தால் ஏதோ ஒரு வகையிலான நன்மை கிட்டும்.

## முகம்

முக பகுதியில் புருவம், கன்னத்தில் விழுந்தால் ஒருவரின் முகத்தில் பல்லி விழுந்தால், சீக்கிரமே உங்கள் வீட்டு கதவை உறவினர் தட்டலாம்.

மேலும் புருவத்தின் மீது விழுந்தால், ராஜ பதவியில் இருப்பவரிடம் இருந்து உங்களுக்கு உதவி கிடைக்கும். ஆனால் அதுவே உங்கள் கன்னம் அல்லது கண்களில் விழுந்தால், ஏதோ ஒன்றுக்காக நீங்கள் தண்டிக்கப்படுவீர்கள்.

## இடது கை, இடது கால்

இடது கை அல்லது இடது காலில் விழுந்தால் மகிழ்ச்சி கிடைக்கும். இதுவே வலது கை என்றால் உங்கள் உடல்நலம் பெருவாரியாக பாதிக்கப்படும்.

## பாதம்

பாதத்தில் பல்லி விழுந்தால் வருங்காலத்தில் பயணம் மேற்கொள்வீர்கள். பிறப்புறுப்பின் மீது விழுந்தால் கஷ்டகாலம் மற்றும் வறுமையை அது குறிக்கும்.

## தொப்புள்

பல்லி விழும் இடம் உங்கள் தொப்புள் என்றால் உங்களுக்கு மதிப்புமிக்க கற்களும், ரத்தினங்களும் கிடைக்கும்.

## தொடை

பல்லி உங்கள் தொடையில் விழுந்தால் உங்கள் பெற்றோருக்கு நீங்கள் வருத்தத்தை ஏற்படுத்துவீர்கள்.

## மார்பு

இடது பக்கம் மார்பில் பல்லி விழுந்தால் சுகம் மற்றும் வலது பக்கம் மார்பில் விழுந்தால் லாபம் கிடைக்கும்.

## கழுத்து

கழுத்தின் இடது பக்கம் பல்லி விழுந்தால் வெற்றி உண்டாகும் மேலும் வலது பக்கம் விழுந்தால் மற்றவருடன் பகை உண்டாகும்.

## பரிகாரம்

பல்லி விழுந்ததும் நீங்கள் செய்ய வேண்டியது உடனே குளித்து விட்டு கோவிலுக்கு செல்ல வேண்டும். அப்படி இல்லையென்றால், உங்கள் பூஜை அறையில் விளக்கு ஏற்றலாம்.

பூஜை அறையில் விளக்கெண்ணெய் கொண்டு மண் விளக்குகள் ஏற்றலாம்.

காஞ்சிபுரத்தில் உள்ள வரதராஜ பெருமாள் கோவிலில் தங்கம் மற்றும் வெள்ளியில் செய்யப்பட்ட பல்லி உள்ளது. அதனுடன் சூரியன் மற்றும் சந்திரனின் சித்திரத்தையும் காணலாம்.

அந்த பல்லிகளை தொடுவதால் நம் மீதுள்ள தீய தாக்கங்கள் மற்றும் முன்னாள் மற்றும் வருங்காலத்தில் வரப்போகும் தோஷங்கள் நீங்கும் என்பது நம்பிக்கை.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ் புக் ஒர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு, நாளிதழ்கள்,
போன்றவை தரமாகவும் குறைந்த
செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: 08825844033



ஆன்மிகமலர் மெயில் புக்

# 1008 பழம் கெடாமல் இருந்த அதிசயம்

சென்னையிலிருந்து ஒரு முக்யஸ்தர் அன்றைக்கு ஸ்ரீமடத்துக்கு வந்திருந்தார்.

பெரியவாளின் திருச்சந்நிதிக்கு சமர்பிக்க வேண்டும் என்பதற்காகத்தன் தோட்டத்தில் விளைந்த இரண்டு தார்வாழைப்பழங்களைத் தன்னுடன் கொண்டு வந்திருந்தார். பெரியவாளுக்கு வாழைத்தார்களை சமர்ப்பித்து விட்டு,அவருக்கு நமஸ்காரம் செய்து பிரசாதம் பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

மடத்திலேயே கைங்கர்யம் செய்யும் கிருஷ்ணமூர்த்தியை அழைத்து 'இந்த ஒவ்வொரு தார்லயும் எத்தனை பழம் இருக்குன்னு எண்ணிச் சொல்லு' என்றார் மகா பெரியவா.

கைகளை உதறிக் கொண்டு கிருஷ்ணமூர்த்தி எழுந்தார். பெரியவாளிடம், "எண்ணிட்டேன் பெரியவா ஒரு தார்ல 275 பழம், இன்னொரு தார்ல 375 பழம் இருக்கு" என்றார்.



"சபாஷ்..சரி.." என்று இழுத்த பெரியவா,"ஒரு தார்ல 1008 பழம் இருக்கிறதை நீ இது வரைக்கும் பார்த்திருக்கியோ..." என்று கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்துக் கேட்டார்.

ஒரு சில விநாடிகள் கழித்து கிருஷ்ணமூர்த்தி. "இல்லே பெரியவா... இதுவரை நான் கேள்விப்பட்டதில்லே. பெரியவா உத்தரவு கொடுத்தா அப்படி ஒரு தார் எங்கிருந்தாலும் பிடிச்சுண்டு வந்துடறேன்" என்றார்.

"ஓ...இந்தக் கேள்விக்கெல்லாம் நானே பதில் சொல்லுவேன்னு ரொம்ப ஆவலா எம் மூஞ்சியை பாத்துண்டிருக்கியா?" என்று புன்னகையுடன் கேட்ட பெரியவா, "இதுக்கு நா பதில் சொல்ல வேணாம். இளையாத்தங்குடில மாரியம்மன் கோயில் இருக்கு. அங்கே போ. அந்த அம்மனை தரிசனம் பண்ணு.உனக்கு எல்லா விவரமும் தானா கிடைக்கும்" என்று பொசுக்கென்று முடித்தார் மகா பெரியவா.

'1008 பழங்கள் அடங்கிய வாழைத்தாரைப் பார்ப்பதற்கு இளையாற்றங்குடிக்குப் போ' என்று பெரியவா கட்டளை இட்டதில் வியப்பு ஒன்றும் இல்லை. இளையாற்றங்குடிக்கும் காஞ்சி ஸ்ரீசங்கர மடத்துக்கும் நிறைய தொடர்பு உண்டு.

மகா பெரியவா சொன்னபடி அடுத்த நாளே தன் குடும்பத்தோடு இளையாற்றங்குடி புறப்பட்டார் கிருஷ்ணமூர்த்தி. பெரியவா திருவாக்கின்படி மாரியம்மனைத் தரிசித்தார்.

அப்போது கோயிலில் இருந்த யாரோ இருவர் வாழைத்தார்களைப் பற்றி திடீரென பேசிக் கொண்டிருந்தனர். சட்டென்று இவர்கள் பேச்சு காதுகளில் விழ... ஆச்சர்யப்பட்டு சம்பாஷணை நிகழ்ந்த திசை நோக்கித் திரும்பினார்.

அவர்களிடம், "ஐயா..1008 வாழைப்பழம் இருக்கிற மாதிரி நல்ல வாழைத்தார் வேணும். இந்த ஊரில் எங்கே கிடைக்கும்?" என்று கேட்டார்.

ஏற இறங்கப் பார்த்த ஒரு ஆசாமி தன் வலக்கையை, நீட்டி, "தோ...தெக்கால போங்க. ஒரு பெரிய கிணத்தைத் தாண்டியதும் நிறைய வாழைமரம் இருக்கிற தோட்டம் ஒண்ணு வரும். அங்கே இருக்கிறவர்கிட்ட கேட்டுப் பாருங்க" என்று சொன்னார்.

தலையில் முண்டாசு கட்டிய ஒருவர் இவரை எதிர்கொண்டு விசாரிக்க 1008 வாழைப்பழங்கள் அடங்கிய தார் ஒன்று வேண்டும் என்று சொன்னார். சற்று முன் வாழைமரத்தில் இருந்து அறுத்துத் தரையில் இறக்கி வைக்கப்பட்டிருந்த தார்களில் இருந்து ஒன்றைத் தூக்க முடியாமல் சுமந்து வந்தார்.அவர். "இதான் சாமீ நீங்க கேட்ட 1008 பழத்தாரு.." என்று இவர் முன்பாக வைத்தார்.

உடலெங்கும் புல்லரிப்பு. மகா பெரியவாளின் தீர்க்க தரிசனத்தை நினைத்துப் பரவசப்பட்டார்.

தோட்டத்துக்காரன் சொன்ன விலையான ரூபாய் முப்பதைக் கொடுத்து விட்டு, ஒரு ஆசாமியை கூலிக்கு அமர்த்தி பெரியவா திருச்சந்நிதியின் முன்னால் அந்த வாழைத்தாரைக் கொண்டு போய் வைத்தார்.

அதைப் பார்த்து பெரியவா புன்னகைத்தார்.

"1008 பழம் இருக்கிற தாரைப் புடிச்சுண்டு வந்துட்டே போலிருக்கு?" என்று பெரியவா இடி இடியெனச் சிரித்தார்.

"நேத்து ஊர்ல பாக்கறதுக்குக் காயா இருந்தது. பெரியவா சந்நிதிக்கு வந்தவுடனே மஞ்ச மசேல்னு பழுக்க ஆரம்பிச்சுடுத்து" என்றார் கிருஷ்ணமூர்த்தி நெகிழ்ச்சியுடன்.

"விஷு (மலையாள புத்தாண்டு) வரப் போகிறது. இந்த தாரை ரொம்ப கவனமா குருவாயூருக்கு அனுப்பிவிடு" என்றார் பெரியவா தடாலென்று.

அப்போது பெரியவா கைங்கர்யத்தில் இருந்த சீடர்கள் "விஷுவுக்கு இன்னும் பதினாலு நாள் இருக்கே... அதுக்குள்ள இந்த தாரை இங்கே வெச்சிருந்தா அழுகி வீணாப் போயிடுமே" என்று இவர் காதருகே வந்து குசுகுசுத்தனர்.

அப்போது கிருஷ்ணமூர்த்தி சொன்னார்;

"இது குருவாயூருக்குப் போகணும்னு பெரியவா உத்தரவு போட்டிட்டாருன்னா, அது பதினாலு நாள் இல்லே... பதினாலு வருஷம் ஆனாலும் கெட்டுப் போகாது. அன்னிக்கிப் பழுத்த பழம் போல பொலிவோட பிரகாசமா இருக்கும். பெரியவா வாக்கு என்னிக்குமே தப்பாது" என்று சொல்லி தாரைப் பத்திரப்படுத்துமாறு ஒரு சிஷ்யரிடம் சொன்னார்.

குருவாயூரில் சமர்ப்பிக்கப்படும் வரை அந்த 1008 பழத்தில் ஒரு பழம்கூட தாரில் இருந்து கீழே விழவில்லை. முனையில் கருக்கவில்லை. கொஞ்சமும் வீணாகாமல் புத்தம் புதிதாக அப்படியே இருந்தது அதிசயம்தான்.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

**இணையதளம் வாயிலாக மாதம் இரண்டுமுறை வெளிவரும் e-book (இ-புக்) அற்புத ஆன்மிக செய்திகளையும் உங்கள் மொபைல், டேப் போன்றவற்றில் 24X7 மணிநேரமும் படித்து பயன்பெறலாம்.**

dailyhunt

MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP · READ · ENJOY

போன்ற பிரபல தளங்களிலும் படிக்கலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 08825844033

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து Aanmeega malar (mobile app) டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.

ஆன்மிகமலர்.காம்

